வருட சந்தா ரூ. 3 Rgd. No. M. 2419



11 AUG 19

# மாத்வமித்திரன்.



# The Madhwa Mitran

Editor, Bhagavatha Ranganathachariar
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.





| Vol. 3 | பிரஜோத்பத்தி ஸம்வத்ஸரம் நிஜ ஆஷாட மாஸம் | No 12 |
| --- | --- | --- |
| புஸ்தகம் 3 | பௌர்ணமி (29—7—31) | நெ 12 |





பொருளடக்கம்.


பக்கம்

1. ஷட்ப்ரச்ன உபநிஷத் 353
2. துவாதசஸ்தோத்திரம் (ஸ்ரீமத்வாசாரியார்) 357
3. ஸ்ரீ தாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) 361
4. யக்ஞம் (வாஜ்பேயயாஜி வாஸுதேவதீக்ஷதர்) 369
5. மோக்ஷம் [ஸ்ரீமான் எம். ராமராவ்) 373
6. அணு ஜயதீர்த்த விஜயம். 377
7. செய்தித்திரட்டு 380


ஆசிரியர்
[பா]கவத ரங்கநாதாசாரியார்.

72
N31.3.
208683

ஸ்ரீ உத்தராதி மடாதிபதி ஸ்ரீ ஸத்யத்யானதீர்த்தஸ்வாமிகள்
அருளிச்செய்த

**ஸ்ரீ கீதாதத்வம். ( I Part. )**

கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் (ஆத்யம்) பாகவதரங்கநாதாசாரியாரால் எளிய தமிழில் எழுதப்பட்டது. ஸ்ரீ விஷ்ணு ஸர்வோத்தமத்வம், ஜகத்ஸத்யத்வம், ஜீவப்ரம்ம அபேதம், ஜீவர்களின் பாரதந்திரியம், தாரதம்மியங்கள், முக்தி ஸ்வரூபம் இந்த ஸ்ரீமத்வ மதப்ரமேயங்களின்மீது இதர மதத்தார்களால் முக்யமாய் அத்வைதிகளால் செய்யப்படும் [illegible]லவகை ஆக்ஷேபணைகளுக்கு ஸ்ரீபகவத்கீதையின் வசனங்களா[illegible]லேயே பலவகை திருஷ்டாந்தபூர்வமாய் தக்க சமாதானங்கள் [illegible]றப்பட்டிருக்கின்றன. தேவநாகரத்திலும் தமிழிலும் சுலோகங்கள் வெளியாகின்றன. உயர்ந்த காகிதத்தில் அச்சாகிவரும் சுமார் 400/ பக்கங்களைக்கொண்ட இந்த புத்தகம் தற்போது பணம் செலுத்துகிறவர்கட்குமட்டில் விலை ரூ. 1–8–0. சுமார் 80 பக்கங்களைக்கொண்ட 5 சஞ்சிகைகளாக அனுப்பப்படும். ஸ்ரீவிஷ்ணுஸர்வோத்தமத்வ ஸமர்த்தனமாகிய முதற் சஞ்சிகை இப்போது தயார். தனிச்சஞ்சிகை கிரயத்திற்கு கொடுக்கப்படமாட்டாது. தற்போது ஆர்டர் செய்கிறவர்கட்கு தற்போது ரூ. 1—12—0க்கு வி. பி. பி யில் அனுப்பப்படும். இதர ஸஞ்சிகைகள் இனமாய் புக் போஸ்ட்டில் அனுப்பப்படும். ஒவ்வொரு மாத்வரின் கைவசமுமிருக்கவேண்டிய இப்புத்தகத்துக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

மானேஜர், மாத்வமித்திரன்.
ஸ்ரீ வியாஸவிலாசம், கும்பகோணம்.

---

தந்தி விலாசம்:—கிரேயான்ஸ். 1922ல் ஸ்தாபிதம்.

சென்னைக் கவர்னர் பாராட்டிய தொழிற்சாலை எது?

**நேஷனல் கிரேயான் ஒர்க்ஸ்**

**கும்பகோணம்.**

இதில் பாடசாலைகளுக்குவேண்டிய பலவர்ண சாக்கட்டிகள், பிலியார்டு சாக்பீஸ்கள், சாக்கட்டியில் பிளாட்டிங் பேப்பர் வெயிட்டுகள், பென்ராக்குகள், இந்து ஆலய விக்ரகங்கள் முதலியவை வெகு அபூர்வமாகத்தயாரிக்கப்படுகின்றன. மெடல்களும் ஸர்ட்டிபிகேட்டுகளும்பெற்றது, கவர்மெண்டாரால் ஆதரிக்கப்பெற்றது.

எங்கள்தொழிற்சாலையில் நவராத்திரியைஉத்தேசித்து ஸ்பெஷலாக ஸ்ரீகணேசர், ஸ்ரீஆஞ்சநேயஸ்வாமி, ஸ்ரீலக்ஷ்மி, ஸ்ரீஸரஸ்வதி முதலிய பிம்பங்கள் அழகாய் தயாரிலிருக்கின்றன. விபரம் மானேஜருக்குஒருஅணா தபால் பில்லை அனுப்பி தெரிந்து கொள்ளவும். விபரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

6-NOV 1933
MADRAS

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(பத்தொன்பதாவது அத்யாயம்.)
(காபிரைட்) முன் தொடர்ச்சி.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

---

ஹே பீமசேன! குயவன் வீதியில் நெருப்பு விழுந்து அது எரிந்துகொண்டேயிருக்கும்பொழுது அங்கிருந்த ஓர் குயவனுடைய பிரார்த்தனையின்பேரில் அவனுடைய பெரிய வீட்டை கீழ் தரையுடன் கிளப்பி நெருப்பில்லாத இடத்தில் அதைக் கொண்டுபோய் ஸ்தாபித்து அந்த வீட்டை அக்னிபாதையினின்றும் ஸம்ரக்ஷித்தாய். அந்த ஸந்தோஷத்தால் அந்தகுயவன் அந்த வீட்டைப்போல் அவ்வளவு பெரியதான ஓர் பானையை தினம் உனக்கு செய்துகொடுக்கிறான். நீ அந்த பானையை கையிலெடுத்துக்கொண்டு ஹூங்காரம் செய்துகொண்டு நீ பிக்ஷை எடுக்கிறாய். இப்படி நீ உன் க்ஷத்திரிய தர்மத்தின் நியமத்தைக்கொண்டிருப்பதாலும், உன் பலத்தாலும், இவ்வூரில் நடமாடிவரும் துரியோதனனுடைய ஆட்களுக்கு நீ பீமசேனனென்று தெரியவரக்கூடும். ஆகையால் எனக்கு பயமாக இருக்கிறது. அதற்காக நீ குந்தியுடனே வீட்டிலேயே இருந்துவிடு. அர்ஜுனன் முதலானவர்கள் பிக்ஷையை எடுத்து வீட்டிற்கு

உ58710
சென்னை-600 008



கொண்டுவந்த அன்னத்தையே பீமசேனா! நீ போஜனம் செய். நீ பிக்ஷைக்கு எடுக்க வெளியே போகவேண்டாம். என்றிவ்வாறு தர்மபுத்திரர் சொன்னபிறகு பீமசேனர் அதன்படி வீட்டிலேயே இருந்துவந்தார். தர்மபுத்திரர் முதலானவர்களும் தங்கள் க்ஷத்திரிய தர்மத்தைக் காப்பாற்றிக்கொள்ள பிராம்மணர்களைப்போல் பிக்ஷாம்தேஹி என்று சொல்லாமலே மௌனமாகவே இருந்து பிக்ஷை எடுத்துவந்தனர்.

---

## பகாஸுர வதம்.

சிறிது காலத்திற்குப்பின் பாண்டவர்களாகிய தர்மபுத்திரர் முதலான நான்குபேரும் பிக்ஷைக்காக வெளியில் போயிருக்கும் பொழுது பீமசேனர் குந்தியுடன் வீட்டிலிருந்தார். அப்பொழுது பீமசேனர் தான் வசிப்பதற்கு காரணமாயுள்ள அந்த வீட்டு பிராம்மணன் அவளுடைய பத்னியுடன் சேர்ந்து அழும் குரலைக்கேட்டார். ஸ்திரீயும் குழந்தைகளுமுள்ள வீட்டிற்குள் போனால் தன்னைக்கண்டு குழந்தைகளை சீராட்டுவதில் அந்த அம்மாள் லஜ்ஜைப்படலாமென்று யோசித்து அவர் உள்ளே போகவில்லை. தாயான குந்தியை அழைத்து வீட்டு ப்ராம்மணன் ஏன் அழுகிறானென்பதை தெரிந்துவா. பிறகு அழுகைக்குத் தகுந்த நிவிருத்தி உபாயத்தைச் செய்கிறேனென்று சொன்னார். அப்பொழுது குந்தி சீக்கிரமே பிராம்மணர் இருந்த இடம் சென்றாள். கதவின் மறையில் நின்று பிராம்மணரின் வீட்டில் நடக்கும் பிராம்மணனின் வார்த்தைகளை உற்றுக் கேட்டாள். அப்பொழுது அந்த வீட்டுக்காரனான பிராம்மண சிரேஷ்டன் தன்னுடைய பத்னியைப்பார்த்துச் சொன்னான். பிரியே! உண்மையாய் பர்வதத்திற்கு ஸமமாய் பக்ஷ்யபோஜ்யங்களைச் சேர்த்து ஓர் ஆசாமி இரண்டு மாடு இவைகளுடன்கூடிய ஓர் வண்டி சாதத்தை இன்று பகாஸுரனுக்கு அவசியம் நாம் கப்பம் கட்டவேண்டும். எங்களிடமோ ஆசாமிமட்டில் இல்லை. பலியாக ஓர் ஆளை நாம் கொடுக்காமற்போனால் எங்களெல்லோரையும் பகாஸுரன் விழுங்கிவிடப்போகிறான். முன்பே நாம் வேறு ஊருக்குப் போய் விடுவோமென்று நான் சொன்னேன். அந்த வார்த்தை உன்



மனதில் ஏறவில்லை. ஆகையால் நானே இறக்க சுயம் அந்த ராக்ஷஸனுடைய வாயிக்குப்போகிறேன். இப்படி பர்த்தா சொன்னதைக்கேட்டு பிராம்மணனின் பாரியாள் பேசினாள். பதியே! நீர் பகாஸுரனின் வாயிக்குப் போகவேண்டாம். நான் போகிறேன். உங்கள் நிமித்தமாய் நான் இப்பொழுது தேஹம் விட்டால் பதிவ்ரதாஸ்திரீகள் போகும் லோகத்தில் நான் இருப்பேன். உங்கள் நிமித்தமாய் நான் சரீரம் விடாமற்போனால் கெட்ட லோகத்தை நான் அடைவேன் என்றாள். அப்பொழுது கல்யாணமாகாதிருந்த அவருடைய பெண் தகப்பனைப்பார்த்துச் சொன்னாள். விவாகமாகாத கன்னிகையால் என்ன பிரயோஜனம். ஆகையால் நானே பகாஸுரனுடைய வாயிக்குப்போகிறேன். இப்படி தன் பெண் சொல்வதைக் கேட்டு பிராம்மணன் தன்னைச் சுடு என்று சொல்லிக்கொண்டான். கன்னிகையோ தாய் குலம், தந்தை குலம் இவைகளை உத்தரிப்பவளென்று சொல்லப்படுகிறது. பத்னி என்பவள் சிநேகிதியாவாள். ஸகா ஜாயா என்று வேதம் கூறுகிறது. தானே மகனாய்ப் பிறக்கிறானெனப்படுகிறது. ஆத்மாவை புத்ர நாமாஸி என்று வேதம் கூறுகிறது. இப்படியிருக்க நான் பிழைக்கவேண்டுமென்று புத்தி பூர்வமாய் மனுஷ்ய மாம்ஸம் போஜனம் செய்யும் பகாஸுரனிடம் என் பெண்ஜாதி, பெண், பிள்ளை இவர்களை அனுப்புவது முடியவேமுடியாது. என்றிவ்வாறு மூவர்களும் சேர்ந்து அழும் பொழுது அந்த பிராம்மணனுடைய சிறு குழந்தை கையில் ஒரு ஈருக்குச்சியை எடுத்து அம்மூவர்களுக்கும் காட்டி இதனால் அந்த பகாஸுரனைக் கொல்கிறேனென்று சொல்லிற்று.

இப்படி அந்த குழந்தை சொல்லவும் அந்த நல்லவாக்கை ஆஸ்பதமாக் வைத்துக்கொண்டு குந்திதேவி உள்ளே பிரவேசம் செய்து அந்த வீட்டு பிராம்மணன் இருந்த இடத்திற்குச் சென்றாள். பிராம்மணனை என்ன சமாசாரமென்று பிரச்னம் செய்ய ராவணனின் தாய்மாமனான பகாஸுரனென்பவன் அவ்வூரிலிருப்பதாயும், அவனுடைய பலம், வீரியம் தேவர்களாலும்கூட தாங்கமுடியாதென்றும், பதின்மூன்று வருஷத்திற்கொருமுறை ஒவ்வொரு வீட்டுக்காரரும் அவனுக்கு கப்பம் கட்டவேண்டி

யிருக்கிறதென்றும் அந்த பிராம்மணோத்தமர் சொன்னார். இந்த பகாஸுரன் க்ரூரமான பலமுள்ளவன். மகா வீரியவான். ஸ்ரீ ராமர் இருந்தகாலத்தில் ஸ்ரீராமருடைய உத்தமமான பாணங்களுக்கு மிகவும் பயந்து குகையில் பதுங்கிக்கிடந்தான். ஸ்ரீ ராமர் வைகுண்டத்திற்கு பிரயாணம் செய்தபின் ராஜர்களை தன் வசமாக்கிக்கொண்டு அவர்களை பயமுறுத்தி அவர்களால் கப்பத்தைப்பெற்றுவந்தான். என்றிவ்வாறு ப்ராம்மணன் சொன்னதைக்கேட்டு குந்தி சந்தோஷப்பட்டாள். இப்படிப்பட்ட பலசாலியான பகாஸுரனை பீமசேனர் சீக்கிரம் கொன்று கீர்த்தியையும் விசேஷமான தர்மத்தையும் இந்நகரில் அவர் அடையப் போகிறார். நாமெல்லோரும் அந்த பீமசேனனை அநுஸரித்து தர்மிஷ்டர்களாகப் போகிறோம். என்று அபிப்பிராயப்பட்டு குந்தி சந்தோஷங்கொண்டாள். பின் பிராம்மணரைப்பார்த்துப் பேசினாள். ஓ பிராம்மணோத்தமரே! எனக்கு ஐந்து பிள்ளைகளிருக்கின்றனர். அவர்களில் ஒரு பிள்ளை இந்த ராக்ஷஸனுடைய வாயிக்கு இன்று போகட்டும். என்று குந்தி சொல்லவும் அந்த ப்ராம்மணர் உங்கள் மகனைக் கொல்லுவித்து நான் அந்த ப்ரம்மஹத்யை பாபத்துக்குள்ளாகமாட்டேன். மாதே! உன் மனஸ் மிகவும் தைரியமுள்ளது. ஆச்சரியமாயிருக்கிறது. என்று சொன்னார். அதற்கு குந்தி என் பையனிடம் திக்பாலகர்களாலும் தாங்கமுடியாததான ஓர் வித்தை இருக்கிறது. குருஜனங்கள் சொன்னபோதிலும்கூட அந்த வித்யையை அவன் உபயோகப்படுத்துவதில்லை. அந்த வித்தையை அவன் உபயோகப்படுத்தாமலிருந்தாலும் என் மகனை தேவச்ரேஷ்டர்களும் தைத்யச்ரேஷ்டர்களும் கொல்லமாட்டார்களென்று பதில் சொன்னாள். அவ்வாறு குந்தி ப்ராம்மணரிடம் சொல்லி பீமசேனரிடம் வந்து அந்த எல்லா விருத்தாந்தத்தையுமறிவித்தாள். இதைக்கேட்டு பீமசேனர் துஷ்டனை ஸம்ஹரிக்கும் மகாதர்மம் தனக்கு வந்து சேர்ந்ததென்றறிந்து மேலான சந்தோஷமடைந்தார். அப்பொழுது தர்மபுத்திரர் தம்பிமார்களுடன் வீட்டிற்கு வந்து சந்தோஷத்தால் மலர்ந்த கண்களுள்ள பீமசேனரைப்பார்த்துவிட்டு குந்தியைக்கேட்டார். தாயே! இந்த பீமசேனன் எதனால் விசேஷ



மாய் சந்தோஷத்துடனிருக்கிறான். அதைச்சொல் என்றார். அப்பொழுது குந்தி எல்லா சமாசாரத்தையும் தர்மபுத்திரரிடம் சொன்னாள். உடனே தர்மபுத்திரர் குந்தியைப்பார்த்துச் சொன்னார். என்ன சங்கடமான காரியத்தைச் செய்துவிட்டாய். எவனுடைய பலத்தை நாமெல்லோரும் அண்டியிருக்கிறோமோ அந்த பீமசேனனைக்கொல்ல நீ விரும்பியிருக்கிறாய். யாருடைய புஜபராக்கிரமத்தை முக்யமாக ஆசிரயித்து நாங்கள் எல்லா சத்ருக்களின் ஸம்ஹாரரூபமான ஸ்வதர்மமாகிய ராஜ்யத்தை அடைய அபேக்ஷிக்கிறோமோ அப்பேர்ப்பட்ட பீமசேனரை தாயே! எந்த புத்தியால் பகாஸுரனுடைய வாயிக்கு அனுப்புகிறாய். அதை எனக்கு சொல் என்றிவ்வாறு தர்மபுத்திரர் கேட்கவும் மகா தைரியம் படைத்தவளாய் புத்திசாலியான குந்தி, ஹே மகனான தர்மபுத்திரனே! இந்த பீமசேனனை எல்லா தேவர்களும் சரியே, தைத்யர்களும் சரியே கொல்லமுடியாது. இந்த பீமசேனன் பிறந்த தினமே இந்த குழந்தை கீழே விழுந்ததால் சதசிருங்க பர்வதமே நூறு சுக்கலாய்ப்போய்விட்டது. ப்ரதானரான முக்யப்ராணரே பீமசேனனாய் மனுஷ்யாவதாரம் செய்திருக்கிறார். இந்த பீமசேனனைக்கொல்ல லோகங்களில் பூர்ணபலமுள்ளவன் எவன் இருக்கிறான். என்று குந்தி சொல்லவும் பகாஸுரனிருப்பிடத்திற்கு பீமசேனர் போகட்டுமென்று தர்மபுத்திரர் குந்தியிடம் சொன்னார். மறுநாள் பீமசேனர் எண்ணை தேய்த்துக்கொண்டு அப்யங்கஸ்நானம் செய்து சந்தனம் புஷ்பம் முதலிய போகங்களுள்ளவராய் வண்டியிலேறிக்கொண்டு அந்த வண்டி நிறைய அன்னாதி ஆகாரங்களை எடுத்துக்கொண்டு சென்றார். பகாஸுரனின் வனத்தின் சமீபத்திற்கு வெகு அவஸரமாய் வந்து பாயஸங்கள், வெகு நேர்த்தியான பக்ஷ்யங்கள், பால் குடங்கள் முதலியவைகளுடன் கூடிய மலைபோல் உன்னதமான உத்தமமான அந்த அன்னராசியை ராக்ஷஸன் வந்து தொடுவதற்குமுன் தான் போஜனம் செய்யவேண்டுமென்று விரும்பினார். அப்படியே பீமசேனர் அந்த வண்டியிலிருந்த அன்னராசியை சுற்றிலும் போஜனம் செய்துவரும்பொழுது அங்கிருந்த பகாஸுரன் ஓர் மரத்தை பிடுங்கிக்கொண்டு பீமசேனரிடம் ஓடிவந்து முதுகிலடித்தான்.

பீமசேனர் இடதுகையால் அந்த அடியை தடுத்துக்கொண்டு வலதுகையால் பக்ஷணங்களுடனுள்ள எல்லா போஜனத்தையும் சாப்பிட்டார். அவசரப்படாமல் பீமசேனர் குடம் குடமாய் பாலையும் குடித்து கைகால்களை அலம்பிக்கொண்டு ஆசமனம் செய்து பகாஸுரனை பின் திரும்பிப்பார்த்தார். பிறகு அவனுடன் பெரிய விருக்ஷங்கள், மலைகள் இவைகளைக்கொண்டு யுத்தம் செய்தார். பிறகு அநேக மலைகளால் பகாஸுரன் அடிக்கவும் பீமசேனர் தன்னுடைய பாஹுபலத்தால் பகாஸுரனை கைப்பற்றினார். அவனை தரையில் வீழ்த்தி காலால் தேய்த்தார். அந்த பகாஸுரனுடைய ஓர் காலை பீமசேனர் தன் உள்ளங்காலால் மிதித்துக்கொண்டு அவனுடைய மற்றொரு காலை தன் இடது கையால் பிடித்து பகாஸுரனை இரண்டாய் கிழித்தார். பாபியும் விஷ்ணு த்வேஷியுமான பகாஸுரன் பிராணனை விட்டு மீண்டும் திரும்புதலில்லாததும் க்ரூரமானதுமான உயர்ந்த தமஸ்ஸை கிரமமாய் போய் சேர்ந்தான். எவன் ஜராஸந்தனுக்கும், நரகாஸுரனுக்கும், பரதராஜனுக்கும் முன்னே ஸ்வாதீனமாகவில்லையோ ஜகத்திற்கு மிருத்யுவான அப்பேர்பட்ட பகாஸுரனை நித்யமான பலங்கொண்ட பீமசேனர் ஸம்ஹரித்து அந்த சவத்தை அந்த வண்டியின் முன்னடி வைத்தார். வண்டியை ஏகசக்ரா பட்டணத்தின் வாசலிலேயே நிறுத்திவைத்து பீமசேனர் ஸ்நானம் செய்து அவருடைய அண்ணன் தம்பிகளின் சமீபத்திற்கு வந்தார். பீமசேனர் செய்த உத்தமமான காரியத்தைக்கேட்டு குந்தியும், பாண்டவர்களும் சந்தோஷப்பட்டனர். இனி என்ன நேரப்போகிறதோவென்று பயந்தனர். ஏகசக்ரா பட்டணத்திலுள்ள ஜனங்கள் பகாஸுரனுடைய சரீரத்தை வண்டியில் பார்த்துவிட்டு மிகவும் பயந்தனர். பிறகு அதன்மீது கல் முதலியவைகளை விட்டெறிந்தும் அவன் எழுந்திருக்காமலிருந்ததை பார்த்து அவன் இறந்துவிட்டானென்று கிரமமாய் தெரிந்துகொண்டு, வீட்டு ப்ராம்மணனின் வார்த்தையாலும் பகாஸுரன் பீமசேனரால் இறந்துபோனானென்று தெரிந்து மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். அந்த ஏகசக்ரா பட்டணத்து ஜனங்கள் பீமசேனருக்கு ஒவ்வொரு நாளும்



அன்னரூபமாக கப்பம் கட்டிவந்தனர். பீமசேனர் அந்த ஒரு வண்டி சாதத்தையும் தினம் நரஸிம்ஹரூபியான பகவானுக்கு கப்பமாக கட்டிவந்தார். பிறகு ஸத்யவதி குமாரரான ஸ்ரீவேத வியாஸரால் ப்ரேரிபிக்கப்பட்ட பாண்டவர்கள் ஏகசக்ரா பட்டணத்தினின்றும் துருபதராஜனின் பட்டணத்திற்கு சென்றனர். ஜகத் குருவும் ஈசுவரனுமான ஸ்ரீவேதவியாஸர் துரௌபதி பிறந்தது முதற்கொண்டு அவளுடைய கதையை பாண்டவர்களுக்குச்சொல்லி அந்த துரௌபதி உங்களுக்குக் கிடைக்கப் போகிறாள். நீங்கள் அங்கே செல்லுங்களென்று ப்ரேரிபித்தார். பிறகு அவ்வூரிலுள்ள பிராம்மணோத்தமர்கள் பாண்டவர்களை பிராம்மணர்களென்று நினைத்து துருபதராஜனின் நகரத்தில் நல்ல சாப்பாடு கிடைக்கிறது. நீங்கள் அங்கே செல்லுங்களென்று சொன்னார்கள்.

இதற்கு முன் துருபதராஜன் பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் இறந்துபோய்விட்டார்களென்று கேட்டு மிக்க துக்கங்கொண்ட மனதுடையவனாய், யாஜோபயாஜர் ரிஷிகளின் வாயினின்றும் துரௌபதி அர்ஜுனனுடைய பத்னியாகட்டுமென்று சொன்ன வார்த்தை பொய்க்காதென்று மறுபடியும் நிச்சயித்து, பாண்டவர்கள் பிழைத்திருக்கின்றனரென்றே முடிவு செய்தான். பாண்டவர்கள் எங்கேயோ ஓரிடத்தில் மறைந்திருப்பதாய் நிச்சயம்செய்து அர்ஜுனனின் நிமித்தமாகவே துரௌபதியின் சுயம்வரம் நடக்கப்போகிறதென்று தேசதேசங்களில் பேரிகை அடித்து பிரசித்தப்படுத்தினான். பரமசிவனுடைய வரத்தால் அர்ஜுனனைத்தவிர இதரர்களால் நாண் கட்டவும் முடியாததான தனுஸ்ஸொன்றை ஸம்பாதித்தான். வஸுதேவ குமாரரான ஸ்ரீகிருஷ்ணர் ஸம்பூர்ணமான ஸ்வாபாவிக ஞானத்தால் பாண்டவர்கள் உயிருடனிருப்பதாய் அறிந்தும் பாண்டவர்கள் இறந்ததைக் கேட்டு அந்த துக்க பிரசினம் செய்வதற்காகவென்று துரௌபதியின் சுயம்வர காலத்தில் பலராமருடன் ஹஸ்தினாவதிக்குச் சென்றார். அபிவ்யக்தமானதும் பூர்ணமானதும் நித்யமானதுமான ஆனந்தமுள்ள ஸ்ரீகிருஷ்ணர் ஹஸ்தினாபுரம் வந்து திருதராஷ்டிர குமாரர்களான துரியோதனாதிகளிடம் பாண்ட

வர்கள் இறந்துபோனது உண்மையென்றறிவித்து அவர்களை வஞ்சிப்பதற்காக பீஷ்மாதிகளுடன் சேர்ந்து, ஐயோ பாண்டவர்கள் போனதால் உங்களுக்கு கஷ்டம் வந்ததாவென்று துக்க பிரச்னம் செய்து மிக்க துக்கப்பட்டவர்போல் காட்டிவிட்டு துவாரகைக்குச் சென்றார்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஹஸ்தினாவதிக்கும் துவாரகைக்குமுள்ள மார்க்கத்தில் பிரயாணம் போய்க்கொண்டிருக்கும்பொழுது கிருதவர்மன் அக்ரூரனுடைய போதனையின்பேரில் அவனுடைய தம்பியான சததனு என்ற யாதவனைப் பார்த்து இவ்வாறு சொன்னான். இந்த ஸத்ராஜித் ராஜன் தன்னுடைய மகளான ஸத்யபாமையை ஸ்யமந்தகமாணிக்கத்துடன் எங்களுக்குத் தருவதாய் முதலில் வாக்குத்தத்தம் செய்தான். பிறகு இவன் எங்கள் மூவர்களையும் அவமதித்து சத்யபாமையை கிருஷ்ணனுக்குக் கொடுத்துவிட்டான். ஆகையால் பாப புத்தியுள்ள இந்த சத்ராஜித் ராஜனை இராக்காலத்தில் கொன்றுவிட்டு அவனிடமிருந்துவரும் ஸ்யமந்தக மாணிக்கத்தை எடுத்துக்கொண்டு எங்களிடம் வந்துசேர். ஸ்ரீகிருஷ்ணரின் விரோதம் உனக்கு ஏற்பட்டால் அக்ரூரனுடன் சேர்ந்து நான் உனக்கு சஹாயம் செய்கிறேன். என்றிவ்வாறு கிருதவர்மன் சொன்னதைக்கேட்ட குச்சிதபுத்தியுள்ள சததனு என்ற யாதவன் பூர்வ ஜன்மத்தில் அவன் அஸுரனானதால் சத்ராஜித்ராஜனை அவ்வாறே சம்ஹாரம் செய்தான். பிறகு ஸத்யபாமை ஆனந்தஞான ரூபியாயிருந்தாலும் உலக நடவடிக்கையை ஒத்துப்போவதற்காக ஸத்ராஜித் ராஜனின் சவத்தை நல்லெண்ணையில் போட்டு இந்த சமாசாரத்தை ஸ்ரீகிருஷ்ணரிடம் அறிவிப்பதற்காக ஹஸ்தினா பட்டணம் வந்தாள். ஸ்ரீகிருஷ்ணர் ஸத்யபாமையின் வார்த்தையைக் கேட்டு த்வாரகா பட்டணம் வந்து சேர்ந்தார். ஊர் வந்து சேர்ந்த க்ஷணமே துருபதராஜனுடைய பெண்ணான துரௌபதியின் சுயம்வரம் நடக்கப்போவதாய் துருபதராஜனின் ஆட்கள் சொன்னதைக் கேட்டு யாதவ சிரேஷ்டர்கள் பலராமன் இவர்களுடன் சேர்ந்து பகவான் சீக்கிரமே துருபதராஜனின் நகரத்திற்கு பிரயாணம் புறப்பட்டார்.

(தொடரும்.)



# ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளின் சரித்திரம்.

திருக்கோயிலூருக்கடுத்தாப்போலுள்ள மணம்பூண்டி என்னும் கிராமத்தில் புனிதமான தக்ஷிண பினாகினி தீரத்தில் இம்மகானின் பிருந்தாவனம் வெகு பிரசித்தமாயிருக்கிறது. ஜாதிமத பேதமின்றி ஆயிரக்கணக்கான ஜனங்கள் இவருடைய பிருந்தாவனத்திற்கு ஸேவாதிகளைச்செய்து அவரவர்களின் மனோபீஷ்டங்களைப் பெற்றுவருகின்றனர். புஷ்ய சுத்த ஏகாதசியன்று நடக்கும் இம்மகானின் புண்ய தினோற்சவத்திற்கு பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் பிரதி வருஷமும் கூடுகின்றனர். இவரை சொற்ப நாள் ஸேவிப்பதற்குள்ளாகவே இவர் சொப்னத்தில் தோன்றி அவரவர்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களை நியமனம் செய்து பரமானுக்ரஹம் செய்துவருவது இன்றைக்கும் ப்ரத்யக்ஷமாய் காணப்படுகிறது. இம்மகானின் முழு சரித்திர விபரத்தை அறிய சரியான எந்த அத்தாக்ஷியும் கிடைக்கவில்லை. இம்மகான் ஸ்ரீ உத்தராதிமடத்தின் சம்ஸ்தானாதிபதியாய் சுமார் 31½ வருஷகாலமிருந்துவந்ததாயும் கி.பி. 1517ம் வருஷத்துக்குச்சரியான சகம் 1596 மன்மத ஸம்வத்ஸரம் புஷ்ய சுத்த ஏகாதசியன்று பிருந்தாவனமடைந்ததாயும் மடத்தின் ரிகார்டுகளிலிருந்து தெரியவருகிறது. ஆத்ய வம்சத்தாரின் பழைய ரிகார்டுகளிலிருந்து இம்மகானைப்பற்றி அடியிற்கண்ட சில விஷயங்கள் வெளியாகின்றன. இவர் வெகு பால்யத்தில் பிரம்மசரியத்திலிருந்தே ஸ்ரீஉத்தராதிமடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீரகுவர்ய தீர்த்தரிடமிருந்து ஸன்யாஸம்பெற்றார். ஸன்யாஸம் பெறுவதற்கு முன் இவருடைய பெயர் ஸ்ரீராமச்சந்திராசாரியார். இவர் ஸ்ரீமடத்திலேயே வசித்துக்கொண்டு வித்யாப்யாஸம் செய்துவந்தார். ஸ்ரீரகுவர்ய தீர்த்தரின் சரீரநிலை மாறி இனி பிழைத்திருக்கமுடியாதென்று தோன்றியவுடன் நற்குண நற்செய்கைகள் நிறைந்த இளம்பிராயமுள்ள ஸ்ரீராமசந்திராசாரியாருக்கு ஸந்யாஸம் தந்து ஸ்ரீரகூத்தமதீர்த்தரென்று நாமகரணமிட்டு ஸ்ரீஹரியின் பாதமூலத்தை அடைந்தார். ஸ்ரீரகூத்தமர் அப்பொழுது பாடங்களைப் படித்துக்கொண்டு வித்யார்த்தியாயிருந்ததால் அந்த காலத்தில் மகா பிரசித்த பண்டிதரான ஸ்ரீஜாமதக்னி கோத்ரத்து ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனாசாரியாரை குருவாய் செய்துகொண்டு தனக்கு ஸ்ரீமத்வசாஸ்திர கிரந்தங்களை பாடம் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவரும் அதற்கு ஒப்புக்கொள்ள ஸ்ரீரகூத்தமர் கிரமமாய் எல்லா கிரந்தங்களையும் வெகுகாலம் படி[illegible]

வந்தார். ஸ்ரீகுருரத்னமாலா கிரந்தத்தில் காணப்படுவதாவது:— "தஸ்மின் ஸுவம்சே ஜனிபாவனுத்மா ஸ்வசார நிர்தூதஜனௌகதாப:। ஸுவிருத்தசோபீ கிருஹிவர்ய கிருஷ்ண த்வைபாயனுசார்யவரஸ்ஸுதீப:॥ தர்ஹ்யாப தூர்யாசிரமமப்ரகல்ப:। குரோர்முமூர்ஷோரபி தைவயோகாத்। ரகூத்தமாக்யஸ்தபஸாம் நிதானம் ஸபாவபோதாதி கிருதேர் நிதானம்॥ குரௌன ரமாவல்லபபாதமூலம் கதே ஸமாத்வாகம பாடனுய। குருசகாரைனம பிக்ஞு கிருஷ்ணத்வைபாயனுர்யம் கிருஹிணும்ப்ரபர்ஹம்। அக்ராஹயச்சைஷமுதா ஸுசாஸ்த்ரம் ரகூத்தமார்யம் ஸவிதாஸ்வபாஸ:। வன்ஹிம் யதாதத்வதியான் விசேஷ: ஸுர்யோஸ்தமாப்னோத்யனுனைஷதாதிருக்॥" அச்சமயம் ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனுசாரியார் ஸ்ரீரகூத்தம ஸ்வாமிகளின் அதிஅற்புதமான புத்திநுட்பத்தைக்கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். ஸ்ரீமான் ஆசாரியாருக்கு ஓர் வாக்யத்திற்கு ஓர் அர்த்தம் தோன்றினல் அதைவிட சிலாக்யமாய் ஸ்ரீரகூத்தமர் மற்றொரு அர்த்தம் சொல்லி ஏன் இப்படி இருக்கக்கூடாதென்று கேட்பார். ஒருதரம் படித்தபாடங்கள் இவருடைய ஞாபகத்திலிருந்து தவருவதில்லை. மூலவாக்யங்களை சரமாரியாய் ஒப்பித்துக்கொண்டிருப்பார். இவ்வாறு தன் அபூர்வ மேதையைக்காட்டும் ஸ்ரீரகூத்தமரின் வித்யாஸாமர்த்தியத்தையும் மற்றும் அவரிடமுள்ள சமதமாதி ஸகல குணங்களையும் கண்டு ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனுசாரியார் பயந்து இவர் ஏதோ பெரியதோர் தேவகாரியத்தை முன்னிட்டு உலகிலவதரித்த ஓர் தேவோத்தமராய் இருக்கவேண்டுமென்று நிச்சயித்தார். பெயருக்கு மட்டில் தன்னை இவர் குருவாக வைத்துக்கொண்டு சாஸ்த்ராப்யாஸம் செய்கிறாரேயன்றி இவருடைய புத்திக்கு இவர் வாசித்ததும் வாசிக்காததும்கூட ப்ரதிபலிக்கிறதென்பதை ப்ரத்யக்ஷமாய் கண்டுகொண்டார். இந்த விஷயத்தை உலகில் ப்ரசித்தப்படுத்தி இவருடைய மகிமையை எல்லோரும் கொண்டாடச் செய்யவேண்டுமென்று இவருக்கு தோன்றியது. ஆகவே அதற்கு ஓர் உபாயம் செய்தார். அதாவது ஒருநாள் வழக்கப்படி ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளிடம் பாடம் சொல்லப் போகாமல் தான் இனி அவருக்கு பாடம் சொல்ல முடியாதென்றும் அவரே எல்லா கிரந்தங்களையும் படித்துக்கொள்ளலாமென்றும் சொல்லியனுப்பினர். "இத்தம் ஸமாத்வாகம சிக்ஷிதாத்மா கிருஹிப்ரபர்ஹேண ரகூத்தமார்ய:। ஸ்வபாடகே பக்தியுதோபிதேன வ்யஸிருஜ்ய தாத்மீய யசோர்த்தமேவ" என்றார். ஸ்ரீரகூத்தமர் இவ்வாறு தம் குருவான ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனுசாரியார் திடீரென்று சொல்லியனுப்பியதற்கு காரணமென்னவென்று அவரை கேட்டும் இனி அவருக்கு இதாரிளிடமிருந்துபாடம் கற்றுக்கொள்வது வேண்டாமென்றே



அபிப்பிராயப்பட்டுதான் சொல்லியனுப்பியதாய் அவர் அறிவித்தார். அப்பொழுது ஸ்ரீரகூத்தமர் தம்முடையகுருவான ஸ்ரீரகுவர்யதீர்த்த ஸ்வாமிகளின் பாதுகையின் எதிரில் உட்கார்ந்து குருபாதத்தை தியானம் செய்து மேல் நடக்கவேண்டிய பாடத்தைத் தாமாகவே பாடம் சொல்லவாரம்பித்தார். கங்கா ப்ரவாஹம்போல் தங்குதடையின்றி ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளின் வாக்யங்கள் வெளியாயின. அச்சமயம் ஸ்ரீ கிருஷ்ணத்வைபாயனுசாரியாரும் மடத்துக்கு வந்து பேரானந்தமடைந்தார். "அத ஸ்வகுருபாதுகா நிகட பாடன வ்யாபிருதோ குரோர் மஹிமதோ த்யகாத்யதிவரோமலம் தர்சனம்। ஸுதீமணிரபி யதீசிதாமந்தமாகஸ்மிகம் நிசாம்ய மதிவைபவம் குருகிருபாபலஸ்யாஸ்மாத்." என்று சொல்லப்பட்டிருக்கிறது. குருவான ஸ்ரீரகுவர்யர் ஓம் ப்ரதானவதேவஹிததுக்தம் என்ற சூத்திரத்தின் அர்த்தத்தை ஸ்ரீரகூத்தமரிடம் காட்டினர். ஸ்ரீரகூத்தமரோ ஓம் பூர்வவிகல்ப: ப்ரகரணாத் ஸ்யாத் க்ரியாமானஸவத் என்ற அதகரணத்தின் அர்த்தத்தை உலகத்தாருக்கு அறிவித்தாராம். "ரகுவர்ய குரு: ப்ரதான ஸுத்ரப்ரதிபாத்யம் ஸமதர்சயஜ்ஜனௌகம்। ப்ரகடீகிருதவான் ரகூத்தமார்யோ குருவைகல்ப நயார்த்தமாச்ரிதார்த்தம்" என்றார். அதாவது சிரவணமனனுதிகளைவிட குருவின் அனுக்ரஹம்தான் ப்ரபலமானதென்பதை குருவான ஸ்ரீரகுவர்யர் ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளுக்கு அனுக்ரஹம் செய்து உலகத்தாருக்கறிவித்தார். ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளோ முதல் குருவைவிட உத்தமமான குருவை அடைய பூர்வ குருவின் அனுக்ஞையை தேடவேண்டியதில்லை என்ற ப்ரமேயத்தை வெளிக்காட்டினர். இவ்வாறு ஸ்ரீரகூத்தமர் ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனுசாரியார் பாடம் சொல்ல நின்றதிலிருந்து தமது குருவான ஸ்ரீரகுவர்யதீர்த்தரின் பரமானுக்ரஹம் பெற்று பண்டிதஸார்வபௌமராய் விளங்கவும் ஸ்ரீரகூத்தமஸ்வாமிகள் தமக்கு பூர்வ குருவாயிருந்து ஸகல சாஸ்திரங்களையும் பாடம் சொல்லி மிக்க ப்ரக்யாதமான நிலைக்கு வருவதற்கு காரணமாயிருந்த மகா பண்டிதரான ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனுசாரியாருக்கு இணையற்ற மரியாதைகளைக் காட்டிவந்தார். அவர் செய்த பேருதவியை நினைத்து அவருடைய வம்சத்தார்களுக்கும் இனி தம்முடைய மடத்தில் ஸம்ஸ்தானம் வகிக்கப்போகும் எல்லா ஸ்வாமிகளும்கூட எல்லோருக்கும் முன் முதலில் தீர்த்த கந்தாக்ஷதை முதலான மரியாதைகளைக் காட்டவேண்டுமென்று நியமத்தை ஏற்படுத்தினர். அவ்வாறு முதல் மரியாதைப் பெற யோக்யமாய் போனதால் அந்த வம்சத்தார் ஆத்யம் எனப்பெயர் பெற்றனர். ஸ்ரீரகூத்தமஸ்வாமிகள் ஏற்படுத்திய நியமனத்தை இன்

றைக்கும் ஸ்ரீஉத்தராதிமடம் ஸம்ஸ்தானாதிபதிகளாய் இருந்துவரும் மகா ஸ்வாமிகள் அனுஷ்டித்துவருகின்றனர். தற்காலம் ஸ்ரீஉத்தராதிமடாதிபதியான ஸ்ரீஸத்யத்யானதீர்த்தஸ்வாமிகள் 1931ம் ஸூ த்தில் இந்நகருக்கு விஜயம் செய்த சமயத்தில் ஆத்யவம்சத்தவரான இப்பத்திராதிபருக்கு பெரிய கூட்டங்களில் பல சந்தர்பங்களுள் அசேஷவைதிக லௌகிகர்களுக்கு முன்பு முதல் தீர்த்த கந்தாக்ஷதை மரியாதைகளைச் செய்து தம்முடைய பூர்வீகர்கள் பரமானுக்ரஹம் செய்து அளித்திருக்கும் ஆத்யம் என்ற பட்டத்தை நழுவவிடாமல் அவருடைய பெயருடன் சேர்த்துவைத்துக்கொள்ளும்படி ஆக்ஞையிட்டு அருள்புரிந்தவிஷயம் ஏற்கனவே இம்மித்திரனில் வெளியாயிருப்பது இம்மித்திரன் வாசகர்களுக்கு ஞாபகத்திலிருக்கட்டும். இப்படியிருக்க ஸ்ரீரகூத்தமஸ்வாமிகள் ஆத்யவம்சத்தவர் அவமதித்து துக்கப்படுத்தியதாக ஒருவர் ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளின் சரித்திரத்தில் எழுதியிருப்பது வியக்கத்தக்கதாயிருக்கிறது. ஆத்யமென்ற பட்டத்தை அளித்தவர் ஸ்ரீரகுநாததீர்த்தரென்றும் ஆத்யவம்சத்து மூலபுருஷர் ஸ்ரீவரதராஜாசாரியாரென்றும் அறிவிக்கப்பட்டிருப்பது சரியல்ல. ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனாசாரியார் ஆத்யவம்சத்து மூலபுருஷராவார். அவர்தான் ஸ்ரீரகூத்தமரிடமிருந்து ஆத்ய பட்டத்தைப் பெற்றாரென்று குருரத்னமாலை ஸ்பஷ்டமாய் அறிவிக்கிறது. அங்கு காணப்படுவதாவது:— மனுஜைாத சவதத்யதீசாத் லபதேஸ்மாத்ய பதம் நிஜான்வயஸ்ய॥ கிருஷ்ணத்வைபாயனாசாரியோ பக்னுபாத்யபதம் புவி। தத்வம்ச்யாஆமபீ தானீம் ஸாக்ர்யபுஜம் விராஜதே। கிருஷ்ணத்வைபாயனாசாரியாத் பிபிதுர்பஹூதான்வயா:। கிருஷ்ணத்வைபாயனத்யத்வத் வேதா: சாகாதிரூபத:॥ ஸ்ரீமஉஷூ தாராஸாஸ்வத ப்ரவிருத்தாகில ஸம்பத:। கேட்மனூராதி தேசேஷு தேவஸன்ன குதோபயா:॥ ப்ராக்ஞோ வரதராஜாக்ார்ய: தத்வம்சே ப்ரமமோ பவத்। யத்புத்ரோ நரஹர்யார்ய: சக்ரேதாத்பரிய தீபிகாம்॥ சகாரஸோயம் விவிருதிம் ஸுபோதாம் மன் ஸ்ரீமகாபாரத நிர்ணயஸ்ய। ஜன்மாந்தராகேன நிநிநது ரேனும் ஸமத்ஸரா: ஜாவ்மவரா: குவாச:॥" யதீசுவரரான ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளிடமிருந்து ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனாசாரியார் தம்முடைய வம்சத்தாருக்கே ஆத்யமென்ற பட்டத்தைப்பெற்றார். ஆகவே இன்றைக்கும் அவருடைய வம்சத்தாருக்கு அக்ரபூஜை நடந்து வருகிறது. ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனரான ஸ்ரீவேதவியாஸரால் வேதங்கள் அநேக சாகைகளாய் பிரிந்தன. அந்த வம்சத்தவர்கள் அநேகமாய் எல்லோரும் மகாபண்டிதர்கள். ஸ்ரீ ஜயதீர்த்தரின் நியாயஸுதையை பாடப்ரவசனம் செய்வதில் மகா ப்ரஸித்தர்கள். அதனால் ஸகல ஸம்



பத்துக்களும் நிறைந்தவர்கள். கேட்மனூர் முதலிய பம்பாய் மாகாணத்து ப்ராந்தியங்களில் ஏராளமாய் அந்த வம்சத்தார்களிருக்கின்றனர். ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனாசாரியரின் குமாரர் மகா பண்டிதரான ஸ்ரீவரதராஜாசாரியார். அவர் முதல்கொண்டே ஆத்யபட்டம் முதல் மரியாதைப்பெற ஆரம்பித்தது அவர்தான். ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயத்திற்கு வரதராஜீயமென்ற அற்புதமான வ்யாக்யானத்தைச் செய்தவர். ஆத்யவம்சத்தாரிடம் மாச்சரியங்கொண்ட சில அயோக்யர்கள் குச்சிதமான புத்திகளைச் சொல்லி பூர்வஜன்ம பாபத்தால் அந்த வ்யாக்யானத்தை தூஷித்தனர். அந்த ஸ்ரீவரதராஜாசாரியாரின் குமாரர் ஸ்ரீநரஹரி ஆசாரியார். அவர்தான் ஸ்ரீபாகவத தாத்பர்யத்திற்கு ப்ரசித்தமான தீபிகை என்ற வ்யாக்யானம் செய்தவர். இவ்வாறு ஸ்ரீமத்வசாஸ்திரங்களுக்கு இவ்வம்சத்தார் அநேக டீகாடிப்பணிகளை எழுதியிருக்கின்றனர். அவர்களின் சரித்திரம் மற்றொரு சந்தர்பத்தில் அறிவிக்கப்படும். ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளின் காலத்தில் ஸ்ரீஉத்தராதிமடத்திற்கு ஏராளமான சொத்துக்களும் யானை, குதிரை, பல்லக்கு முதலான பிருதுக்களும் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. இவர் பாவபோதமென்ற வியாக்யானம் செய்திருப்பதைக்கொண்டு பாவபோதாசாரியாரென்றும் திருக்கோயிலூரில் எண்ணிறைந்த பக்தர்களுக்கு மனோபீஷ்டங்களை வர்ஷித்துக்கொண்டு பிரஸித்தமாயிருப்பதால் திருக்கோயிலூர் ஸ்வாமிகளென்றும் சொல்லப்படுவார். இவர் செய்த நூல்களாவன:—

1. தத்வப்ரகாசிகா பாவபோதம். 3. பிருஹதாரண்யக பாவபோதம்.
2. நியாயவிவரண பாவபோதம். 4. தத்வநிர்ணயடிப்பணி.
5. தினத்ரய நிர்ணயம்.

---

## ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

## மணிமஞ்ஜரி.

---

(எட்டாவது ஸர்க்கம்) முன் தொடர்ச்சி.

---

(16) அங்கிருந்து நந்திக்ராமம் போய்சேர்ந்து அவ்வூரிலிருந்த ஜனங்கள் மாயாவாதிகளால் பலவகை ரோகங்களால் கஷ்டப்பட்டு வருவதை ஸ்ரீஹரி ஸ்மரணையால் மாற்றி அவர்களுக்கு

உபாதியில்லாமல் செய்தார். ஏகாந்தமாய் அவர்களுக்கு விஷ்ணு ஸர்வோத்தமத்வத்தைச் சொல்லக்கூடிய த்வைத ஸித்தாந்தத்தை உபதேசித்து ஸ்ரீஹரியை ஸர்வோத்தமரென்று எல்லோரும் உபாஸிக்கும்படி செய்தார். (17) ப்ராக்ஞதீர்த்தரும் அவருடைய சிஷ்யர்களும் நந்திக்கிராமத்தில் சிலகாலம் தங்கியிருந்துவிட்டு பிறகு பதரிகாசிரமம் சென்றனர். அங்கிருந்த விஷ்ணுபக்தர்கள், ப்ராக்ஞதீர்த்தாதிகள் மாயாவாதிகளின் நிர்பந்தத்தால் இவ்வாறு மாறுதலாயிருந்துவருகின்றனரென்பதை தெரிந்து அவர்கள் செய்துவரும் ஏகாந்தமான உபாஸனையை உணர்ந்து அவர்களுக்கு மிக்க மரியாதையை காட்டினர். அவர்கள் அங்குள்ள புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து மௌன வ்ரதமுள்ளவர்களாய் தீவிரமான உபவாஸாதி வ்ரதங்களைச்செய்தனர். (18) ஹே நாராயணா! நமஸ்காரம். தத்வாபிமானி தேவர்களே! உங்களுக்கு நமஸ்காரம். குருநாதனான ஸத்யப்ராக்ஞதீர்த்தரே! எங்களுக்கு ஸத்கதியைத் தாருமென்று அந்த ப்ராக்ஞதீர்த்தரும் அவருடைய சிஷ்யர்களும் கதறினர். (19) அப்பொழுது ப்ராக்ஞதீர்த்தரின் குருவான ஸத்யப்ராக்ஞதீர்த்தர் மகரிஷிகளுடன் அவர்களின் முன் தோன்றினர். மாயாவாதிகளான அஸுரர்களால் கஷ்டப்படும் அந்த ப்ராக்ஞதீர்த்தாதிகள் எல்லோரும் அவர்களைக்கண்டவுடன் தடபுடலாய் நமஸ்காரம் செய்தனர். 20. ஸத்ஸம்பிரதாயத்தை விட்டதாலும் துஸ்ஸம்பிரதாயத்தை கைக்கொண்டதாலும் யாது பயமேற்படுமோவென்று மிகவும் பயந்திருக்கும் அவர்களுடைய சங்கடத்தை அறிந்து மகா தபஸ்வியான ஸத்யப்ரக்ஞர், கதறிக்கொண்டு பூமியில் தண்டம்போல் விழுந்திருக்கும் அந்த ப்ராக்ஞதீர்த்தாதிகளை, வணங்கியது போதும் எழுந்திருங்களென்று ஆக்ஞாபித்து அவர்களை எழுப்பினர். (21) ஸத்யப்ராக்ஞதீர்த்தர் சுயம் ஓர் ஆஸனத்தில் அமர்ந்து, மகரிஷிகளையும் ப்ராக்ஞதீர்த்தாதிகளையும் ஆஸனத்தில் அமரச்செய்து இவ்வாறு பேசினர். ஹே சிஷ்யர்களே! உங்கள் பயத்தை பூரா்வாய் நான் என்னுடைய தபஸ்ஸால் அறிவேன். (22) இந்த காலமோ கலியின் காலமாக இருக்கிறது. அந்த கலியால் ஜனங்கள் சங்கடப்படுகின்றனர். ஜகத் மித்யை என்று சொல்லி தத்வார்த்தத்தை அஸுரர்கள்



கெடுத்து வருகிறார்களென்று நீங்கள் கடுமையாக சங்கடப்படுவதை குழந்தைகளே! இனி விட்டுவிடுங்கள். (23) ஹே ப்ராக்ஞதீர்த்தரே! இந்த உங்கள் சிஷ்யர்கள் இங்கிருந்து புருஷோத்தம க்ஷேத்திரமாகிய ஜகந்நாதக்ஷேத்திரத்திற்குச் செல்லட்டும். அங்கு புருஷோத்தமனை உபாஸித்து உத்தமமான மோக்ஷத்தை அடையட்டும். (24) எல்லோரும் மோக்ஷத்தை அடைய எத்தனித்து விடவேண்டாம். இவர்களிலொருவர் தத்வமஸி முதலான வேதங்களுக்கு ஸம்பிரதாயமாய் வந்த அர்த்தத்தை உபதேசம் செய்துவர ஏற்படுத்தப்படட்டும். அவர் மாயாவாதிகளுடனே இருந்து அவர்களின் இஷ்டப்படி எல்லாம் நடந்துகொள்ளட்டும். (25) அவர் மாயிகளுடனே வசித்துக்கொண்டு துர்வாஸாதிகளின் பரம்பரையான இந்த எங்கள் வம்சத்தைத்தரிக்கக்கூடிய ஓர் நிபுணரான பிராம்மணருக்கு முடிவில் ஸன்யாஸத்தைத்தரட்டும். அவர் அவ்வாறே கூடமாயிருந்துகொண்டு முடிவில் அந்த ஸாமர்த்தியமுள்ள மற்றொருவருக்கு ஸன்யாஸம் தரட்டும். இவ்வாறு ஸன்யாஸங்களைக் கொடுத்துவந்து எங்கள் வம்சம் விச்சித்தி அடையாமல் தொடர்ந்துவரட்டும். [குறிப்பு:— இந்த வம்சம் துர்வாஸரிடமிருந்து தொடர்ந்து வந்ததென்று சொல்லப்படுகிறது. அதன் விபரமாவது.—பகவான் ஹம்ஸரூபி பரமாத்மாவிடமிருந்து உபதேசம் பெற்றவர்கள் ஸநகாதிகள். அவர்களுடைய சிஷ்யர் ருத்திராவதாரரான துர்வாஸர். அவருடையசிஷ்யர் ஞானநிதிதீர்த்தர். அவருடைய சிஷ்யர் கருடவாகன தீர்த்தர். அவருடைய சிஷ்யர் கைவல்ய தீர்த்தர். அவருடைய சிஷ்யர் ஞானேசதீர்த்தர். அவருடைய சிஷ்யர் பரதீர்த்தர். அவருடைய சிஷ்யர் ஸத்யப்ரக்ஞதீர்த்தர். அவருடைய சிஷ்யர் ப்ராக்ஞதீர்த்தர். அவருடைய வம்சத்தில் சிஷ்யராய் வந்தவர் அச்யுதப்ப்ரேக்ஷ தீர்த்தர். அவருடைய சிஷ்யர் ஸ்ரீமத்வாசாரியார்.] 26. ப்ராக்ஞதீர்த்தரே! நாராயணன்தான் ஸர்வோத்தமன். ஸர்வ நியாமகன். ஸத்யக்ஞானாதி கல்யாண குணங்கள் நிறைந்தவன். அவனுக்குதான் நான் தாஸன் தாஸோஸ்மி. இது சத்யமென்று முடிவு செய்துகொண்டு அவ்வாறே உபாஸனை செய்துவரவேண்டும். இதை சிஷ்யர்களுக்கு ஏகாந்தமாய் உபதேசித்து அவர்களையும்

ஏகாந்தமாய் இவ்வாறே உபாஸித்துவரும்படி செய்யவேண்டும். இந்த உபாஸனைதான் பரம்பரையாய் கிரமமாய் எங்கள் சிஷ்யர்களில் நடந்துவரவேண்டும். (27) ஆனால் இப்படி உபாஸனை நடந்துவருகிறதே என்று வெளிவேஷத்தை மாறவிடவேண்டாம். இப்பொழுது நீங்கள் இருப்பதுபோலவே மாயாவாதிகளின் வேஷமாகிய திர்யக்புண்ட்ரம் ருத்திராக்ஷதைகளை நீங்களும் உங்கள் வம்சத்தார்களும் தரித்துக்கொள்ளவேண்டும். அந்த மாயாவாதிகளை நமஸ்காரம் செய்யவேண்டும். அப்பொழுது அவர்களின் அந்தர்கதனை ஸ்ரீஹரியை ஸ்மரணம் செய்துகொள்ளுங்கள். அவர்களுக்கு திருப்தி ஏற்படும்படி அவர்களின் சாஸ்திர கிரந்தமான மாயாவாதத்தையே பாடப்ரவசனம் செய்யுங்கள். (28) உலகில் எங்கும் மாயாவாதிகளாகிய மகா அசுரர்களே வியாபித்துவிட்டார்கள். ஆதலால் அவர்களின் நடுவில் நீங்கள் விஷ்ணுபக்தர்களென்பதைக் காட்டிக் கொடுத்துவிடாதீர்கள். அவர்கள் பைரவி முதலான மந்திரங்களாலோ அல்லது கையில் கத்தியெடுத்தோ வைதிகர்களான உங்களைக் கொன்றுவிடுவார்கள். (29) ஆகவே காதுக்களான அந்த மாயாவாதிகளிடமிருந்து நீங்கள் உங்களை காப்பாற்றிக்கொள்ளுங்கள். ஒருக்காலும் இந்த எங்கள் சம்பிரதாயத்தை விட்டுவிடாதீர்கள். இது ஞாபகத்திலிருக்கட்டுமென்றிவ்வாறு ப்ராக்ஞதீர்த்தாதிகளுக்குச் சொல்லி ஞானோத்தமன் கொடுத்திருந்த தண்டகாஷ்டம் காஷாயம் முதலியவைகளை விட்டெறியச்செய்தார். (30) முன்போல் ஸத்யப்ராக்ஞர் ப்ராக்ஞதீர்த்தாதிகளுக்கு தான் தண்டாதிகளைக் கொடுத்து அனுக்ரஹித்தார். நாமினிமேல் தவஞ்செய்து செல்லலாமா என்று குருவான ஸத்யப்ராக்ஞதீர்த்தர் ப்ராக்ஞதீர்த்தாதிகளை விடை கேட்க ப்ராக்ஞதீர்த்தாதிகள் விடைகொடுக்க ஸத்யப்ராக்ஞதீர்த்தர் முன்போல் அந்த இடத்திலேயே அந்ர்தானமடைந்தார். (31) பிறகு ப்ராக்ஞதீர்த்தரின் சிஷ்யர்கள் விரக்தர்களாய் அவ்விடமிருந்து கிளம்பி நேராக ஜகந்நாத க்ஷேத்திரம் போய் சேர்ந்தனர். ப்ராக்ஞதீர்த்தர் அவருடைய குரு உபதேசித்த வழியை அனுஸரித்து மாயாவாதிகளுடனே தான் வசித்துவந்தார். (22) அவர் தன்னுடைய வம்சத்தை தன் உபாஸனையையும் தரிக்கக்கூடிய ஒருவரை சிஷ்யராகச் செய்துகொண்டு அவருக்கு ஸந்யாஸம் தந்து ஸத்யப்ராக்ஞதீர்த்தர் சொன்னபடி ஏகாந்தமாய் துவைத உபாஸனையை உபதேசித்து ஸ்ரீஹரிபதமேகினர். அவர் மற்றொருவருக்கு ஸந்யாஸம் தந்து தம்முடைய ஸம்பிரதாயத்தைக் கற்றுக்கொடுத்தார். (தொடரும்.)



# சங்கரலீலா விலாஸம்.

(முன் தொடர்ச்சி.)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M. A., எழுதுவதாவது:—

இவ்வாறு நஷ்டமாயிருந்து பௌத்தர்களிடம் சிக்கியிருந்த தன் தத்வநிதியை சிரமப்பட்டுவிட்டுவந்து தீரரான தன்னுடைய சிஷ்யரான சங்கராசாரியார் கையில் ஒப்புவித்து அப்பா மகனே! நான் கிழவனாகிவிட்டேன். என்னுடைய இப்பெண் பௌத்தர்களின் வீட்டில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாள். அவளை விடுவித்துக்கொண்டுவந்திருக்கிறேன். இனி நீயே இவளை ஸம்ரக்ஷிக்கவேண்டுமென்றார். சங்காராசாரியார் அப்படியே செய்கிறேனென்று ஸன்யாஸம்பெற்று ப்ரதிக்ஞை செய்தார். சாணக்ய தந்திரத்தைவிட அதிகமாய் தந்திரமறிந்தவர்களால் கல்பனை செய்யப்பட்டிருந்து மத்யகாலத்தில் பௌத்தர்களால் கொண்டுபோகப்பட்டு பிறகு தெய்வபலத்தாலும் கௌடபாதரின் சாமர்த்தியத்தாலும் வாபீஸ் வந்த தம்முடைய சித்தாந்தத்தை அவர் அவைஷ்ணவ சிகாமணிகளுக்கு உபதேசம் செய்யத்தொடங்கினர். பௌத்த தளகர்த்தர்கள் மறுபடியும் அவரை இதைப்பற்றி விசாரித்தனர். சங்கராசாரியார் சிலரை அதட்டி விரட்டிவிட்டார். அதிகமாய் பரீக்ஷிக்க அவகாசம் தரவில்லை. ஆனால் ஓர் போலீஸ் சூபரிண்டெண்டுமெட்டில் அவரை தடுத்து கேள்வி கேட்டான். "விக்ஞான வாதஸ்யகிம் விபேதம்பவன் மதாத் ப்ருஹிதத: பரம் வ்ரஜ" என்றான். அதற்கு அவருடைய குருவான கௌடபாதர் சொன்னபதிலை சொல்லி அவனை பேசாமல் செய்துவிட்டார். "விக்ஞான வாதீ க்ஷணிகத்வ மேஷாம் அங்கீசகாரேதி மகான் விசேஷ:" விக்ஞான வாதி பௌத்தன் அநேக க்ஷணிக விக்ஞானங்களை ஒப்புக்கொண்டிருக்கிறான். நான் ஒரே விக்ஞானவாதத்தை ஒப்புக்கொண்டிருக்கிறேன். ஆகையால் வெகு வித்யாஸமிருக்கிறது. இது உங்கள் ஊர் தத்வமல்ல என்று சொன்னார். இப்பால் ஜனங்கள் என்னென்னமோ சொல்லிக்கொள்ளுகிறார்கள். சங்கராசாரியாரின் தத்வம் பௌத்தமதமென்றே எல்லோருக்கும் சொல்லுகின்றனர். அதனால் என்ன? அவருடைய மதத்தையே அவர் திரும்பி பிடுங்கிக்கொண்டுவந்துவிட்டார். இதில் என்ன தப்பு? சங்கராசாரியாரின் தத்வம்

பௌத்தம்தம்தான் என்பதற்கு சரித்திரகாரர்களின் ஸம்மதியும் காணப்படுகிறது:—

(1) Shankara and his followers borrow much of their dialetic form of criticism from the Buddhists. His Brahmam was very much like the Sunya of Nagarjuna …………The debts of Sankara to the self-luminosity of the Vignana Vada Buddhism can hardly be over-estimated. There seems to be much truth in the accusations against Sankara by Vignana Bikshu and others that he was a hidden Buddhist himself.

S. Das Guptha M.A., P.H.D.,

(2) It is said not without truth that Brahminism killed Buddhism by a fraternal embrace.

S. Radhakrishnan M.A. D. Litt.

(3) Goudapada was familiar with Buddhistic doctrines which he accepted when they were not in conflict with his own Advaita.

(4) Sankara admits the distinction between the Absolute truth (Paramarthika) and empirical truth (Vyavahara) which answers to the Buddhistic distinction between Paramarthika and Samvrithi.

(5) Sankara's conception of Moksha (freedom) is not much different from the Buddhistic view of Nirvana ………The realisation of the identity of the individual soul with Brahma (Soham or Aham Brahmasmi) answers to the I am ;nullity (Sunyativoham of the Madhyanikas through the emphasis is on the different aspects of the one fact.

S. Radhakrishnan M. A. D. Litt.

இவ்வாறு இந்த விஷயங்களில் அநேக ரிகார்டுகளிருக்கின்றன. ஆகவே கௌடபாதர் சங்கராசாரியார் இவர்கள் அவைஷ்ணவர்களின் ஆஸ்தியான மாயாவாதத்தை பௌத்தர்களினின்றும் வாபீஸ் வாங்கிக்கொண்டு அவர்களின் விருத்தர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்தனர். இந்திராதி தேவர்களின் காரியத்தை பலிச்சக்ரவர்த்தியை நிக்ரஹித்து வாமனரூபி பகவான் நிறைவேற்றியதுபோலும், ப்ரம்மாதி தேவர்களின் ப்ரார்த்தனையை ஸ்ரீகிருஷ்ணர் நிறைவேற்றிவைத்ததுபோலும், தேவரிஷிகளால் ப்ரார்த்திக்கப்பட்ட மகாவிஷ்ணு ராவணாதிகளை ஸம்ஹாரம் செய்து தேவகாரியத்தை நிறைவேற்றியதுபோலும், சகுனி துரியோதனனின் காரியத்தை நிறைவேற்றி பாண்டவர்களை வனவாஸத்திற்கு விரட்டியதுபோலும், கெட்டிக்காரனான மாரீசன் ராவணனின் காரியத்தை நிறைவேற்றியதுபோலும், ஸாம்பசாஸ்திரிகள் ஹாதீ ஆசாரியாரை அவமானப்படுத்தவேண்டுமென்று ஸ்மார்த்தர்களின் ப்ரார்த்தனையை முடித்துக்கொடுத்ததுபோலவும், கௌடபாதர் சங்காராசாரியார் இவர்கள் குலவிருத்தர்களின் ப்ரார்த்தனையின்பேரில் ஐக்ய மதத்தின் த்வேஷிகளான பௌத்தர்களால் அபகரிக்கப்பட்டு சூத்ராதிகளிடம் கலந்துபோயிருந்த அவர்களின் மித்யாவாதத்தை திருப்பிக்கொண்டுவந்து அவைஷ்ணவத் தலைவர்களான பத்மபாதர், தோடகாசாரியார் முதலானவர்களால் நாலா பக்கங்களிலும் துதிக்கப்பட்டவர்களாய் விளங்கினர். (தொடரும்)



---

# ஸ்வப்ன பலன்.

---

இரவின் முதல் ஜாமத்தில் ஸ்வப்னம் கண்டால் அதன் பலன் ஒரு வருஷத்தில் உண்டாகும். இரண்டாவது ஜாமத்தில் கண்டால் எட்டுமாஸத்தில் அதன் பலனுண்டாகும். மூன்றாவது ஜாமத்தில் கண்டால் மூன்றுமாஸத்திலுண்டாகும். நான்காவது ஜாமத்தில் கண்டால் பதினைந்துநாளிலுண்டாகும். அருணோதய காலத்தில் ஸ்வப்னம் கண்டால் பத்து நாளிலுண்டாகும். விடியற்காலையில் கண்டால் உடனே அதன் பலன் ஏற்படும்.

அரசன், அரசனுடைய யானை, குதிரை, தங்கம், காளைமாடு, இவைகளைக்கண்டால் குடும்பம் வளரும் காளை, யானை, மாளிகை, பர்வதத்தின் உச்சி, இவைகளின்மீது ஏறியதாய் கண்டால் நல்லது உடம்பில் அமேத்யம் பட்டதாகவும், அழுவதாகவும், இறந்ததாகவும், புணரத்தகாதவர்களுடன் புணர்ந்ததாகவும் கண்டால் நல்லது. படகிலேறிக்கொண்டு வீணையை வாசித்துப்போவதாய் கண்டால் கைக்கு சீக்கிரம் தனலாபம் கிடைக்கும். பால் வடியும் மரத்தையோ அல்லது பழங்களைக்கொண்ட மரத்தையோ ஒருவன் தனியாக ஏறி அதில் இருப்பதாய் ஸ்வப்னம் கண்டு விழித்துக்கொண்டுவிட்டால் அவன் சீக்கிரமே தனமடைவான். மடித்துப்போனதோ, அல்லது முட்கள் நிறைந்ததோ ஓர் விருக்ஷத்தை ஒருவன் தனியாக ஏறி அதில் இருப்பதாய் ஸ்வப்னம்

கண்டு விழித்துக்கொண்டுவிட்டால் அவன் சீக்கிரமே மரணமடைவான். மாட்டு வண்டியில் ஏறிப்போவதாய்க் கண்டால் சிறிது ஸுகமுண்டாகும். குதிரை வண்டியில் ஏறிப்போவதாய் கண்டால் ஸ்திரீ கிடைப்பாள். ரதத்திலேறிப்போவதாய் கண்டால் பணம் கிடைக்கும். மனிதன்மீது ஏறிப்போவதாய் கண்டால் சிந்தையேற்படும். ஆடு இழுக்கும் வண்டியிலேறிப்போவதாய் கண்டால் அநேக கஷ்டங்களுண்டாகும். எருமையின்மீது ஏறிப்போவதாய்க் கண்டால் மரணமுண்டாகும். கழுதை, நாய், இவைகளின்மீதேறிப்போவதாய்க் கண்டால் அபகீர்த்தி உண்டாகும். யானையின்மீதேறிப்போவதாய்க் கண்டால் மகா ஐசுவரியமும், பெரும் ஸுகமும் உண்டாகும். வலது புஜத்தில் வெண்மையான பாம்பு கடித்ததாய் ஸ்வப்னம் கண்டால் பத்து நாட்களுக்குள் அவனுடைய இஷ்டம் பூர்த்தியாகும். பாம்பு, தேள், அட்டை, இவை கடித்ததாய் கண்டால் காரிய ஜயமும், திரவியலாபமும் ஸத்புத்ரனும் உண்டாகும். மலையின் உச்சியிலும் மேல் மாளிகையிலும் ஸமுத்திரக்கரையிலும், தீர்த்தக்கரையிலும் ப்ராம்மணர்களுடன் ஒருவன் போஜனம் செய்வதாய் கண்டால் அவனுக்கு ராஜபதவியேற்படும். குளத்தின் நடுவிலிருந்துகொண்டு தங்கபாத்திரத்தில் நெய் கலந்த பாயஸத்தைக் குடிப்பதாய் கண்டால் அவனுக்கு பூமி கிடைக்கும். ஆஸனம், படுக்கை, வண்டி வாஹனம், வீடு, மண்டபம் இவை நெருப்புப்பட்டு எரிந்துக்கொண்டிருப்பதுபோல் கண்டு விழித்துக்கொண்டுவிட்டால் அவனுக்கு ஸ்திரீகளுடன் ஸுகம் ஏற்படும். சூரிய மண்டலம், சந்திரமண்டலம் இவைகளைக் கண்டால் அவனுடைய வியாதி சொஸ்தமாகப் போகும். விசேஷமான ஸுகமுண்டாகும். இரக்தத்தையோ கள்ளையோ குடிப்பதாய் ப்ராம்மணன் கண்டால் அவனுக்கு வித்யை ஏற்படும். அதையே இதர ஜாதியர்கள் கண்டால் தனம் வரும். ஸ்வப்னத்தில் ஒருவனை கொம்புள்ள மிருகங்களோ, கடைவாய் பற்களுள்ள ஜந்துக்களோ, குரங்கு, பன்றி இவைகளோ துரத்துவதாய்க் கண்டால் அவனுக்கு அரசனுடைய பயம் ஏற்படும். தலைமயிர் உதிர்ந்ததாகவோ பற்கள் விழுந்ததாகவோ கண்டால் திரவியநஷ்டமுண்டாகும். புத்ரநாசமேற்படும். சிவந்த வஸ்திரமுடுத்து சிவந்த சந்தனம் பூசிக்கொண்டு ஓர் ஸ்திரீ கட்டிக்கொண்டதாய் கண்டால் பெரிய துக்கமேற்படும். கருப்பு வஸ்திரமுடுத்து ஸ்திரீயை கட்டியணைத்ததாய் கண்டால் மரணமுண்டாகும். வெண்மையான வஸ்திரமுடுத்தியவளை கட்டியணைத்ததாய் கண்டால் ஐசுவரியமுண்டாகும். (தொடரும்.)



# ஆசாரமாலை.

(முன் தொடர்ச்சி.)

இப்படி ஸ்காந்தபுராணம் அறிவிக்கிறது. துளசிமணி மாலையையுருட்டிக்கொண்டு ஒருவன் ஜபித்தால் அந்த மந்திரசக்தி கோடிமடங்காய் விருத்தியாகும். துளசிமணிகளைக்கொண்டு ஒருவன் கடுக்கன் முதலிய அலங்காரங்களைச் செய்துகொண்டால் அவன் ஸர்வோத்தமமான கதியையே அடைவான். துளஸீமணி நெல்லி மணி கமலாக்ஷ மணி இவைகளால் செய்த மாலிகைகளை முதலில் பஞ்சகவ்யத்தாலலம்பி ஓம் நமோநாராயணாய, காயத்ரி இவைகளால் அபிமந்திரித்து ஸ்ரீஹரிக்கு ஸமர்ப்பணம் செய்து அவைகளுக்கு தூபம், தீபம் நைவேத்யம் அர்ப்பணம் செய்து "ஸத்யோ ஜாதம் ப்ரபத்யாமி ஸத்யோ ஜாதாயவைநம:" என்று மந்திரம் சொல்லி பூஜை செய்து பிறகு அந்த மாலைகளை குருவின் கழுத்தில் போட்டு பிறகுதான் அந்த மாலைகளை தரிக்க வேண்டும். தேவபூஜை ஜபம் செய்யும்பொழுது உத்தம ப்ராம்மணன் அவசியம் மேற்கண்ட மாலைகளை தரித்துக்கொள்ளவேண்டும். மாலைகளை தரித்துக்கொள்ளும்பொழுது இவ்வாறு மந்திரம் சொல்லவேண்டும். "துளஸீ காஷ்ட ஸம்பூதே மாயே க்ருஷ்ண ஜனப்ரியே/ பிபர்மித்வாமஹம் கண்டே குருமாம் க்ருஷ்ணவல்லபம்" என்று பக்தியுடன் சொல்லி பகவானுக்கு ஸமர்ப்பணம் செய்ததை எவன் கழுத்தில் தரித்துக்கொள்ளுகிறானோ அவன் விஷ்ணுலோகம் செல்வான்.

ஸந்தியாவந்தனம்: இனி ஸந்தியாவந்தன விதியைப்பற்றி சொல்லவேண்டிய அம்சங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளை இங்கு சங்கிரஹமாய் எடுத்துச் சொல்வோம். ஸந்தியாவந்தனமாவது சூரியனிடமிருந்துவரும் பகவானுடைய தியானமேயாகும். அதற்குத்தான் விதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. பகலும் இரவும் சேரும் சந்திகாலத்தில் சூ யாந்தர்கதனை பகவானை தினம் தியானம் செய்யவேண்டுமென்று அஹரஹ: ஸந்த்யாமுபாஸீத முதலான வ்யாக்யானங்களால் கட்டளையிட்டிருக்கின்

றன. என்றைக்கு உபநயனமாகிறதோ அன்று மாலை முதற் கொண்டே சாகும் வரையில் ஒவ்வொரு நாளும் ப்ராத: காலம் மத்யான்ஹகாலம், ஸாயங்காலம் மூன்றுவேளையும் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன் ஆகிய மூன்று வர்ணத்தாரும் ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும். ஜனனாசௌசம் மரணாசௌசம் புத்திப்ரமம், மகாவியாதி முதலியவை ஏற்பட்ட ஸமயம், திருட்டு பயம், அரசனால் பயம் ஏற்பட்ட சமயம், ராஜ்யத்திற்கே ஆபத்து வந்தசமயம் இந்த காலங்களில் ஸந்தியாவந்தனம் செய்ய முடியாமல் நின்றுபோனால் பாதகமில்லை. பெரிய தேவகாரியங்கள் யாகாதிகள், ப்ராம்மணர்களின் ஸம்பந்தமான மஹத்காரியங்கள், வித்யாஸம்பந்தமான மகாஸபைகள், பகவத் கதா சிரவணத்தில் ஈடுபட்டிருக்கும் ஸமயம், பகவத் கதையை சொல்லிக்கொண்டிருக்கும் சமயம் பகவத் த்யானம் செய்துகொண்டிருக்கும் சமயம் இந்த காலங்களில் ஸந்தியாவந்தனம் செய்யுங்காலம் தவறினாலும் தோஷமில்லை என்று ஓர் ஸ்மிருதி கூறுகிறது. ஸந்தியாவந்தனம் செய்யத்தவறினால் மகா பாதகமுண்டென்பதை அத்ரி கடுமையாக அறிவித்திருக்கிறார். ஸ்வஸ்தமாயிருந்து ஸந்தியாவந்தனத்தைச் செய்யாதிருந்தால் அவன் சண்டாளனாவானென்றும் அவனுக்கு நற்கதி இல்லை என்றும் அறிவிக்கிறது.

**காலம்:** ஸந்தியாவந்தனத்தை அந்தந்த காலத்தில்தான் தவறாமல் செய்யவேண்டுமென்றும் விதிகள் வற்புறுத்துகின்றன. ப்ராத: ஸந்தியாவந்தனத்தை சூரியோதயத்திற்கு இரண்டு முகூர்த்தத்திற்கு முன் பிராம்மணன் செய்யவேண்டுமென்றும், க்ஷத்திரியன் ஒரு முகூர்த்தத்திற்குமுன்பு செய்யவேண்டுமென்றும், வைசியன் அரை முகூர்த்தத்திற்குமுன்பு செய்யவேண்டுமென்றும் அக்னிஸ்மிருதிகூறுகிறது. [$3\frac{3}{4}$ நாழிகைக்கொண்டது ஒரு முகூர்த்தம்.] இரவும் பகலும் சேரும் சமயம் சூரியனும் நக்ஷத்திரமும் காணப்படாத காலம்தான் ப்ராதஸ் ஸந்தியாவந்தனத்திற்கேற்றகாலமென்று தக்ஷஸ்மிருதி அபிப்பிராயப்படுகிறது. நக்ஷத்திரங்களிருக்கும்பொழுதுதான் ப்ராதஸ்ஸந்தியாவந்தனத்திற்கு உத்தம காலம் என்றும், நக்ஷத்திரம் மறைந்தபின் செய்வது மத்யம காலமென்றும், சூரியன் உதயமானவுடன் செய்வது



அதமகாலமென்றும் ஓர் தர்ம சாஸ்திரமறிவிக்கிறது. சாயங்கால சந்தியாவந்தனத்தை சூரியன் மலைவாயில் விழும்பொழுது செய்ய வேண்டும். சூரியன் அஸ்தமனமாகும் சமயம் சூரியனிருக்கும் பொழுதே ஸாயம்ஸந்தியைச் செய்வது உத்தமமாகும். சூரியன் அஸ்தமனமடைந்தபின் செய்வது மத்யமம். நக்ஷத்திரங்கள் கிளம்பியபின் செய்வது அதமம். சரியாய் மத்யான்ஹகாலத்தில் மாத்யான்ஹிக ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும். ஏதோ ஆலஸ்யப்பட்டு இப்படி சரியாக அந்தந்த காலத்தில் ஸந்தியாவந்தனத்தைச் செய்யாவிடில் சூரியனைக்கொன்ற சூரியஹத்தி மகாபாபம் வருவதுடன் கோட்டான் ஜன்மம் வருமென்று அத்ரி அறிவிக்கிறார். ப்ராத: ஸ்நானம் செய்துவிட்டு ஸந்தியாவந்தனம் செய்யமுடியாவிட்டாலும் ஸ்நானம்செய்யாமலாவது சரியான காலத்தில் ஸந்தியாவந்தனத்தைச் செய்துவிடவேண்டுமென்று ஸ்மிருதிக்காரர்கள் வற்புறுத்துகின்றனர். சாஸ்திரங்களில் எத்தனையோ வகை ஸ்நானங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் மந்திரஸ்நானம் செய்தாவது ஸந்தியாவந்தனம் செய்யும்படி கோபிலர் கூறுகிறார். காலையில் எழுந்தவுடன் சரீரத்தை ஈரவஸ்திரத்தால் துடைத்துக்கொண்டு, தனி வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு கோபீ சந்தனத்தால் நாமம் போட்டுக்கொண்டு ஸ்ரீ ஹரியை ஸ்மரணம் செய்து சந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டுமென்கிறார் கௌதமர். சௌசம் செய்துகொண்டு பல் விளக்கி துவைத்த வஸ்திரமுடுத்தி கோபீசந்தன நாமம் போட்டுக்கொண்டு ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டுமென்றார் ஹாரீதர். ஸ்நானம் செய்திருந்தாலும் சரி செய்யாதிருந்தாலும் சரி தந்ததாவனம் செய்தபின் ஸந்தியா காலத்தை எதிர்பார்த்திருந்து அர்க்யப்ரதானத்தை ப்ரயத்ன பூர்வமாய் செய்யவேண்டுமென்கிறார் ரிஷ்யசிருங்கர். காலாதிக்ரமணதோஷ ப்ராயச்சித்தார்த்தமென்று ப்ராயசித்தமாக செய்யும் அர்க்யத்திற்கு காலம் சூரியோதயமாகி ஆறுநாழிகை வரைதான். அதற்குமேல் ப்ராயச்சித்தார்க்யமில்லை. இல்லை இல்லையென்று மரீசி மும்முறை அழுத்தமாக கூறுகிறார், ஏதோ ஒருஸமயம் ப்ரமாதத்தால் தவறுதல் நடந்தால் அதற்கு ப்ராயச்சித்தமே ஒழிய ஒவ்வொரு நாளும் வேண்டுமென்று காலதாமதமாய் செய்யும் அர்க்யத்திற்கு ப்ராயச்சித்தம் இல்லவே இல்லை என்றும் எக்காரணத்தாலோ மூன்று நாள் ஸந்தியாவந்தனமில்லாதிருப்பவனும் பன்னிரண்டு நாள் அக்னிகார்யமில்

லாதிருப்பவனும் சூத்ரன்தானென்று அத்ரி விஸ்தாரமாய்க் கூறுகிறார். காலத்தில் ஸந்தியாவந்தனம் செய்யாமல் அகாலத்தில் செய்தால் அந்த ஸந்தியாவந்தனம் மலடியைப்போல் நிஷ்பலமே என்றார் யாக்ஞவல்க்யர். ஸ்நானம் செய்யமுடியாமற்போனால் மிருத்திகா சௌசங்கள் செய்துகொண்டு, தந்ததாவனம் செய்துகொண்டு துவைத்தவஸ்திரமுடுத்தி கோபிசந்தன நாமம் போட்டுக்கொண்டு பகவானுடைய ஆயுதங்களின் முத்திரைகளை தரித்து பரமாத்மாவை த்யானம் செய்து காலத்தில் அர்க்யத்தைத்தரவேண்டும். அதனால் ப்ரம்மஹத்யாதி எல்லா பாபங்கள் தொலைவதோடு விஷ்ணுலோகம் கிடைக்குமென்று சங்கஸ்மிருதி அறிவிக்கிறது. பத்து வகை ஸ்நானத்தில் ஏதாவதொரு ஸ்நானத்தைச் செய்து சரீரத்திலுள்ள பாபபுருஷனை சோஷனம் செய்து தஹனம் செய்து பாபபுருஷ விஸர்ஜனபூர்வமாய் உதய காலத்தில் ஸந்தியாவந்தனத்தைச் செய்யும் பக்ஷத்தில் உதயகாலத்தில் ஸ்நானம் செய்து ஸந்தியாவந்தனம் செய்த புண்யம் கட்டாயம் ஏற்படும். இதில் சற்றும் சம்சயமில்லை என்று சாதாதபர் அறிவிக்கிறார். காலத்தில் ஸந்தியாவந்தனத்தைச் செய்யாமல் ஒரு யாமத்திற்குப் பின் ஸந்தியாவந்தனத்தைச் செய்தால் கோஹத்யை, மாத்ருஹத்யை, பித்ருஹத்யை பிரம்மஹத்யை இந்த பாபங்கள் சம்பவிக்கின்றன. ஒரு ஜாமத்திற்கு முன்பு செய்தால்தான் பிராயச்சித்த அர்க்யாதிகள் உண்டு. ஒரு ஜாமத்திற்கு பின்பு செய்தால் ப்ராயச்சித்தங்கூட இல்லை என்று கபிலர் அறிவிக்கிறார். அதிகாலையில் எழுந்து முகம் கைகால் கழுவிக்கொண்டு சௌசாதிகளைச் செய்துகொண்டு கோபீ சந்தனத்தால் நாமம் போட்டுக்கொண்டு ஆபோஹிஷ்டா முதலான சூக்தங்களால் ப்ரோக்ஷணம்கூட இல்லாமல் காலத்தில் சூரியனுக்கு மூன்று அர்க்யங்களைமட்டில் கொடுத்துவிட்டு இரண்டாவது யாமத்தில் விதிப்படி அகமர்ஷணஸூக்தம் முதலியவைகளைச் சொல்லி ஸ்நானாதிகளைச் செய்து கோபீசந்தன நாமாதிகளை தரித்து விதிப்படி எல்லா மந்திரங்களைச் சொல்லி ஸந்தியாவந்தனம் செய்தால் அதற்கு ஸமானம் வேறொன்றுமில்லை. ஆகவே காலத்தில்தான் அர்க்யதானம் செய்யப்படவேண்டும். காலத்தில்தான் யக்ஞமோ, ஹோமமோ, தானமோ எப்படி செய்யப்படவேண்டுமோ அப்படித்தான் ஸந்தியாவந்தனமும் செய்யப்படவேண்டும். அகாலத்தில் செய்வது எதுவும் நிஷ்பலமே. அகாலத்தில் ஸந்தியாவந்தனம் செய்கிறவன் பிராம்மணனன்று.

(தொடரும்.)



# ஸ்ரீபீமசேன விஜயம்.

(முன் தொடர்ச்சி.)

இப்படி பலவகையாய் பீமசேனர் துரியோதனாதிகளை ஹிம்சித்து வந்தார். துரியோதனாதிகளுக்கு தன்னிடம் துவேஷம் விருத்தியாக வேண்டுமென்பதுதான் அவருடைய நோக்கமேயன்றி அவர்களை பாலியத்திலேயே கொன்றுவிடவேண்டுமென்பது அவருடைய எண்ணமல்ல. இதை மகாபாரதம் ஆதிபர்வம் ஸ்பஷ்டமாய் அறிவிக்கிறது. அங்கு காணப்படுவதாவது:— "ஏவம் ஸதார்த்தராஷ்ட்ராம்ஸ்ச ஸ்பர்த்தமானோ விருகோதர:। அப்ரியே அதிஷ்டதத்யந்தம் பால்யாத் நத்ரோஹசேதஸா॥" பீமசேனர் எண்ணியபடியே பொதுவாய் பாண்டவர்களிடமும் முக்யமாய் பீமசேனரிடமும் துவேஷம் அதிகரித்தது. பீமசேனர் தான் பாண்டவர்களுக்கு முக்ய பலமாய் இருப்பதால் அவரை எப்படியாவது கொன்றுவிடவேண்டுமென்று அநேக ஏற்பாடுகளைச் செய்துவந்தனர். பீமசேனருடன் நேரில் சண்டைபோட்டுக் கொல்ல முடியாமலிருந்ததால் அவரைக்கொல்ல அவர்கள் இரகசியமான காரியங்களைச் செய்யவேண்டியதாயிற்று. அதற்கு அஸுராம்சரான அநேக ராஜகுமாரர்கள் சகாயம் செய்தனர்.

## பீமசேனரைக் கொல்ல சூழ்ச்சிகள்.

துரியோதனன் தன் மாமனான சகுனியை அஸுரகுருவான சுக்ராசாரியாரிடம் அனுப்பி க்ஷீரஸமுத்ரத்தில் அமிர்தமதன காலத்தில் உண்டான காளகூட விஷத்தை அவரிடமிருந்து வரவழைத்து, பீமசேனருக்கு சமையல் செய்யும் பரிசாரகனை சுவாதீனம் செய்துகொண்டு, அவருடைய ஆகாரத்தில் அதை கலக்கச் செய்தான். இவ்வாறு துரியோதனன் ஏற்பாடு செய்திருக்கிறானென்பதை துரியோதனனின் கடைசி தம்பி யுயுத்ஸு என்பவன் பாண்டவர்களிடம் விசுவாசமுள்ளவனானதால் முன்னாடியே பீமசேனரிடம் அறிவித்தும் லக்ஷியம் செய்யாமல் அந்த ஆகாரத்தை தானொருவரே புஜித்து ஜீரணத்துக்குக் கொண்டுவந்து எல்லோரும் திடுக்கிடும்படிச் செய்தார். இந்த உபாயம் பலிக்காமல் போகவே துரியோதனாதிகள் பீமசேனரை ஒரு யோஜனை ஆழமுள்ள பிரமாண கோடி என்ற கங்கையின் மடுவில் உருட்டிவிட ஏற்பாடு செய்தனர். அதற்காக அந்த மடுவின் ஓரத்தில் ஓர் புதிய

மாளிகையை கட்டினர். கங்கையில் எல்லோரும் சேர்ந்து ஜலக்ரீடை செய்வதென்றும், பிறகு எல்லோரும் சேர்ந்து அந்த மாளிகையில் விருந்து சாப்பிட்டு அன்றிரவு அங்கு படுத்துறங்குவதென்றும், வெளியே பகிரங்கப்படுத்தி பாண்டவர்களை ஜலக்ரீடைக்கு அழைத்தனர். பீமசேனரைக் கொல்வதற்காக இவ்வாறு ஏற்பாடு செய்திருப்பதாய் யுயுத்ஸு முன்னாடியே பீமசேனரிடம் வந்து சொன்னான். பீமசேனர் சிரித்துக்கொண்டு ஒன்றுக்கும் பயப்படவேண்டாமென்று சொல்லிவிட்டு துரியோதனாதிகளுடன் வெகுநேரம் கங்கையில் நீந்திவிட்டு, பிறகு போஜனம் செய்து, அந்த மாளிகையில் கங்கையின் ஓரத்திலேயே அவர்கள் தன்னைக்கொல்ல அனுகூலமாயிருக்கும்படி தனக்கு நல்ல காற்று வேண்டுமென்று சாக்கு சொல்லி படுத்தார். துரியோதனாதிகள் மிகவும் சந்தோஷப்பட்டு பீமசேனர் குறட்டைவிட்டுக்கொண்டு நன்றாய் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது அவரை இரும்புக்கம்பிகளாலும் மந்திரக்கயிறுகளாலும் இருகக்கட்டி அவரை சுலபமாய் கங்கையில் உருட்டிவிட்டனர். பீமசேனர் கங்கையின் ஜலத்தில் மூழ்கியபின்தான் விழித்துக்கொண்டார். இவர் ஒருதரம் கொட்டாவிவிட்டவுடன் உடம்புப் பெருத்து அவரைக்கட்டியிருந்த அந்த ஏராளமான கட்டுகளெல்லாம் சுக்கல் சுக்கலாய்ப் போய்விட்டது. இவ்வளவு ஆகியும் அவருக்கு தூக்கம் தெளியவில்லை. ஆதலால் தூக்கத்திலேயே நீந்திக் கரை யேறி முன்போல் படுக்கையில் படுத்து நல்ல தூக்கம் தூங்கினார். துரியோதனாதிகள் இதைப்பார்த்துவிட்டு மிகவும் ஆச்சரியப்பட்டனர். பீமசேனர் உடனே ஓர் அறை அறைந்து இவர்களைக்கொன்றிருக்கலாம். அவர்களைக் கொல்வதில் அவருக்கு அபிப்பிராயமில்லையாதலாலும், தனக்கு அவர்கள் அநேக துரோஹங்களைச் செய்திருக்கின்றனரென்பதை அறிவிக்கவேண்டுமென்று அவருடைய எண்ணமாதலாலும் அவர்கள் செய்யும் சூழ்ச்சியை தான் அறிந்துகொண்டதாக அவர் காட்டிக் கொடுக்கவில்லை. துரியோதனாதிகள் தங்களாலியன்றவளவு எல்லா உபாயங்களையும் செய்ய முனைந்தனர். உயர்ந்த ஸர்பவம்சத்தில் பிறந்த ஸர்பங்களை வரவழைத்து, மந்திரபலத்தால் கூண்டில் அடைத்துவைத்திருந்து ஒரு சமயம் பீமசேனர் நன்றாய் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது, துரியோதனன் தன்னுடைய சாரதியைக்கொண்டு அவைகளை பீமசேனரின் மார்பில் விட்டு கடிக்கச்செய்தான். மகாவிஷ ஜ்வாலைகளைக் கக்கும் அந்த எட்டு ஸர்பங்களும் அர்த்தராத்திரியில் பீமசேனரைத் தீண்ட, பீமசேனர் அதை எறும்புகடிப்பதுபோல் உணர்ந்து தூங்கிக்கொண்டே அவைகளை கையால் பிடித்து தூற எறிந்தார். பீமசேனரைக்கடித்ததால் பாம்புகளின் பற்கள் உதிர்ந்துபோயின. பீமசேனரின் சரீரத்தில் எள்ளளவும் சேதிக்கப்படவில்லை. அதனால் விஷம் பீமசேனரின் சரீரத்தில் சற்றும் ஏறவில்லை. அச்சமயம் பீமசேனர் ஒருதரம் பிறண்டபொழுது சமீபத்தில் பாம்புகளைக் கடிக்கவிட்டுக்கொண்டிருந்த அந்த ஸாரதியின்மேல் அவருடைய இடது கை விழுந்து ஸாரதி உடனே பிராணனை விட்டான். இந்த எத்தனமும் வீணாய்ப்போகவே துரியோதனாதிகள் துக்கப்பட்டனர். மறுநாள் சகுனியுடன் இவர்கள் யோசித்து முன்னைவிட பலமாக பீமசேனரைக்கட்டி மீண்டும் கங்கையில் உருட்டிவிட தீர்மானித்தனர். அதற்காக பலமான ஏற்பாடு செய்தனர். கங்கையில் அந்த பிரமாணகோடி மடுவில் தீக்ஷிணமான சூலங்கள் முதலிய ஆயுதங்களை நட்டுவைத்திருந்தனர். அன்றைய விருந்தில் பீமசேனருக்கு பறமாறும் பக்ஷணங்களில் எல்லாம் கடுமையான விஷத்தைக் கலந்திருந்தனர். இந்த விருத்தாந்தங்களையெல்லாம் முன்னாடி யுயுத்ஸு மூலமாய் அறிந்திருந்ததால் பீமசேனர் முன்போலவே ஜலக்ரீடை செய்து, விருந்துண்டு, கங்கையின் ஓரத்தில் அந்த மாளிகையில் படுத்துத்தூங்கிவிட்டார். துரியோதனாதிகள் அவரை பலமாக இரும்புக் கயிறுகளால் பலவகையாய் இறுகிக்கட்டி அர்த்தராத்திரி வேளையில் கங்கையில் உருட்டினர். பீமசேனர் சரீரம் பட்டமாத்திரத்தில் கீழே இருந்த சூலம் முதலான ஆயுதங்கள் முறிந்தன. சரீரம் பலமாக கட்டப்பட்டிருந்ததால் அந்த கனமான சரீரம் நேராக கீழே பாதாளலோகம் போய்ச் சேர்ந்தது. அங்கிருந்த மகா ஸர்பங்களெல்லாம் புதியதாய் தங்கள் உலகம் வந்து சேர்ந்த பீமசேனரின் சரீரத்தை பலமாகத் தீண்டின. விஷபக்ஷணங்களை சாப்பிட்டு விஷம் மூளைக்சேறி அதுவரை மயக்கமாய் கிடந்த பீமசேனரின் சரீரத்தை அந்த பாம்புகளெல்லாம் கடித்ததால் அங்கிருந்த விஷமெல்லாம் பாம்புகளிடம் போய் சேர்ந்து, பீமசேனருக்கு மயக்கம் தெளிந்து சுயப்ரக்ஞை வந்தது. தன்னைக்கொல்ல சூழ்ந்திருக்கும் பாம்புகளில் அநேகங்களை தன் கையாலடித்துக்கொன்றார். சிலவைகளை விரட்டினார். அவைகள் ஓடிப்போய் ஸர்பராஜனான வாஸுகியிடமறிவித்தது. உடனே வாஸுகி ப்ராணபதியான பீமசேனர் தன் உலகம் வந்திருப்பதைக் கேட்டு, மிகுந்த மரியாதையுடன் தனது அரண்மனைக்கு அழைத்துப்போய் விசேஷமான உபசரணைகளைச் செய்தான். அவன் தன் பொக்கிஷத்தில் தனிமையாய் வைத்திருந்த அமிர்தரஸத்தை பீமசேனருக்கு ஏதேச்சமாய் பானம் செய்யக்கொடுக்கும்படி தன் ஆட்களுக்கு ஆக்ஞையிட்டான்.

(தொடரும்.)

# தலவகார உபநிஷத்.

## இரண்டாவது கண்டம். (முன் தொடர்ச்சி.)

ஞானத்தாலேயே மோக்ஷத்தை அடைவதாயிருந்தால் அவரவர்களின் யோக்யதைக்குத் தகுந்த எல்லா ஆனந்தங்களும் அதனாலேயே உண்டாகுமோவென்றால் க்ஞானமேற்பட்டபின்பு செய்யும் நிவிருத்த கர்மாவால் அவை உண்டாகவேண்டுமென்கிறார். ப்ரம்மக்ஞானமேற்பட்ட பின்பு யக்ஞாதி ப்ரயத்னத்தால் முக்தியின் ஆனந்தத்தின் அதிசயத்தை அடைகிறான். அபரோக்ஷ ஞானத்தாலோ அவித்யையின் பரிகார ரூபமாகிய முக்தியை அடைகிறானென்று அறிவீர் என்றார். (4) ஸ்வயோக்யமான ப்ரம்மஞானம் அபீஷ்டத்தைத் தருவதாக இருக்கட்டும். அதை எப்பொழுது ஸம்பாதிப்பதென்றதற்கு இந்த மந்திரத்தில் பதில் சொல்லப்படுகிறது. என்னைப்போன்ற ஸத்குரு கிடைத்தபொழுது உங்களைப்போன்றவர்கள் ப்ரம்மஸ்வரூபம் அறிந்தால் மோக்ஷாதி ரூபமான மங்களமிருக்கிறது. ஏனெனில் ஸத்குரு உபதேசத்திலுண்டான ஞானம்தான் மோக்ஷத்திற்கு ஸாதனம். அப்படி ஸத்குரு கிடைத்து அவரிடமிருந்து ப்ரம்மஞானத்தை அறியாதிருந்தால் மகா ஹானிதான் ஏற்படுகிறது. ஆகவே ப்ரம்மஞானத்தால் இஷ்டமும், ப்ரம்ம ஞானமில்லாததால் அநிஷ்டமும் ஏற்படுவதால் புத்திமான்கள் எல்லா ப்ராணிகளின் குருவாய்க்கிடைத்த ஸாதுக்களில் இவர் எனக்கு எல்லா அனுக்ரஹ பூர்வமாய் ப்ரம்மத்தை உபதேசம் செய்வாரென்று நிச்சயம் செய்து அவ்வாறு நிச்சயம் செய்யப்பட்ட ருருவின் உபதேசத்தால் பரப்ரம்மஸ்வரூபத்தை அறிந்து பகவானை அபரோக்ஷம் செய்து கடைசி சரீரத்தினின்றும் வெளியேறி முக்தர்களாகின்றனர். (இரண்டாவது கண்டம் ஸம்பூர்ணம்.)

## மூன்றாவது கண்டம்.

பரப்ரம்மம் அத்யற்புதமானதால் அவர் தேவர்களால் ஸம்பூர்ணமாய் அறியப்படமுடியாதவரென்று முன்னாடி சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விஷயத்தில் ஒரு கதையையும் சதுர்முகன் சொல்லுகிறார். தேவர்களுக்கும் தைத்யதானவர்களுக்கும் யுத்தம் ஏற்பட்டபொழுது தேவர்களின் அந்தர்யாமிரூபியான பரப்ரம்மமாகிய பரமாத்மா ஸ்ரீநாராயணர் தேவர்களுக்கு ஐசுவரியமேற்படுவதற்காக தைத்யதானவர்களை யுத்தத்தில் ஜயித்தார். அப்படி ஜயம் ஏற்பட்ட பிறகு தேவர்களின் அந்தர்யாமியான அந்த ப்ரம்மத்தின் ஜயகாலத்தில் தேவர்கள் கர்வமடைந்தனர். பரப்ரம்மத்திற்கு ஜயம் ஏற்பட்டால் தேவர்கள் ஏன் கர்வமடைந்தனரென்றால் அந்த தேவர்கள் எங்களுக்குத்தான்; இந்த ஜயம் இந்த மகிமை எங்களுக்குத்தான் ப்ரம்மத்திற்கல்லவென்றே அறிந்துகொண்டனர். இப்படி தேவர்கள் அகங்காரமடையவும் அவர்களில் அந்தர்யாமியான பரப்ரம்மம் இந்த தேவர்கள் அஸுராவேசங்கொண்டு பகவானை அறியாது அகங்காரம் கொண்டிருப்பதை அறிந்தார். (2) இப்படி பரப்ரம்மம் அறிந்து அந்த தேவர்களுக்கு தன் ஸ்வரூபத்தை அறியப்படுத்துவதற்காக யக்ஷனைப்போல் ரூபத்துடன் ப்ரம்மா, வாயு, சேஷன், கருடன், ருத்திரன் இவர்களின் பாரியைகள் இவர்களுடன் அவர்களின் எதிரில் தோன்றினார். அந்த யக்ஷத்தைப்பார்த்து இந்த யக்ஷம் ஏதென்று அந்த யக்ஷரூபத்தை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. இப்படி அந்த யக்ஷரூபியான ப்ரம்மத்தை அறியாத அந்ததேவர்கள் அக்னிபகவானைப்பார்த்து ஹே அக்னியே! கண்ணெதிரில் தோன்றியிருக்கும் இந்த யக்ஷம் எது என்று அறிவாய் என்று சொன்னார்கள். இப்படி தேவர்கள் சொல்லவும் அக்னிபகவான்நான் இந்த யக்ஷத்தின் ஸ்வரூபத்தைஅறிகிறேனென்று அந்த யக்ஷரூபியாகிய ப்ரம்மத்தின் எதிரில் போய் சேர்ந்தார். எதிரில் வந்த அந்த அக்னியைப் பார்த்து யக்ஷரூபியான ப்ரம்மமாகிய ஸ்ரீஹரி நீ யார் என்று கேட்டார். நான் அக்னி நான் ஜாதவேதஸன். எனக்கு இந்த பிரஸித்தமான நாமங்களுண்டு என்று அக்னிபகவான் சொன்னார். அப்படிப்பட்ட உன்னிடம் என்ன ஸாமர்த்தியமிருக்கிறதென்று யக்ஷரூபி பகவான் கேட்டார். பூமியில் எதுஇருக்கிறதோ அதை எல்லாம் நான் கொளுத்திவிடுவேன் என்று அக்னி பகவான் சொன்னார்

(தொடரும்.)

## ஓர் அறிக்கை.

பட்டிர் நஷ்டோ பாரவீயோபி நஷ்ட: பிக்ஷுர்நஷ்டோ பீமசேனோ ஞபிநஷ்ட:] புக்குண்டோஹம் பூபதிஸ்த்வம் ஹிராஜன் பாபாவல்யாம் அந்தகஸ்ஸன்னிவிஷ்ட:" என்றார் ஒரு கவி. அதாவது முதலில் பட்டி இறந்தான். பிறகு பாரவீயன் இறந்தான். பிறகு பிக்ஷுவும், பிறகு பீமசேனனும்' இறந்தார்கள். புக்குண்டனான நான் பாக்கி இருக்கிறேன். பிறகு பூபதியான நீர் பாக்கியிருக்கிறீர்; இப்படி ப என்ற எழுத்தின் ப, பா, பி வரிசையில் யமம் பிரவேசித்தது ஆச்சரிய மாக இருக்கிறதென்று ஓர் கவி வர்ணித்தாராம். அதுபோல் இத்தென் னாட்டில் பல பாஷைகளில் பற்பல யோக்யதையுள்ள ஆசிரியர்களால் அநேக மாத்வ பத்திரிகைகள் தோன்றியும் எல்லாம் ஒன்றின்பின் னொன்றே மறைந்துபோய்விட்டன. ஸ்ரீமான் கும்பணிபுரம் ஸுப் ரம்மண்யாசாரியாரின் ஸ்ரீமத்வஸித்தாந்தபோதினி, ஸ்ரீமான் எலத்தூர் பிரம்மதர்கம் கிருஷ்ணசாரியாரின் ஸ்ரீமத்வஸித்தாந்த சந்திரிகா, ஸ்ரீ மான் ஆரணி வாஸுதேவாசாரியாரின் ஆர்யதர்ம்போதினி, ஸ்ரீமான் திருவனந்தபுரம் பாபுராயரின் மாத்வா ஜர்னல், ஸ்ரீமான் கொள்ளே காலம் தேவாஜிராயரின் ஹரிதாஸா, ஸ்ரீமான் மந்திராலயம் கிருஷ்ண சாரியாரின் ஸநாதன தர்ம காமதேனு, மற்றும் மைசூர், பெங்களூர், பூனா, தார்வார் முதலிய இடங்களில் பிரசுரமாகிவந்த அநேக மாத்வ பத்திரிகைகளின் கதி என்னவாயிற்று. ஆறுவயதுள்ள பம்பாய் மத்வ முனிதாஸாவுக்கும் சுவாசமிழுத்துக்கொண்டிருப்பதாக சென்ற மித்தி ரனில் செய்தி வெளியாகிவிட்டது. மாத்வமித்திரனுக்கும் உபாதி கண்டிருப்பதாய் எற்கனவே அறிக்கை வெளியிடப்பட்டிருப்பினும் ஸ்ரீ ராகவேந்திரரின் அனுக்ரஹத்தால் உபாதி விருத்தியடையாமல் நற்கா லம் பிறக்கலாமென்றும் உபாதி நீங்கலாமென்றும் எதிர்பார்க்கப்படு கிறது. தினந்தோறும் புதிது புதிதாய் பற்பல நாமங்களைக்கொண்டு பற்பல நோக்கங்களை பூர்த்தி செய்துகொள்ள ஆயிரக்கணக்கான பத்தி ரிகைகள் கிளம்பி பதினாயிரக்கணக்கான ஜனங்களால் ஆதரிக்கப்பட்டு வரும் இந்த காலத்தில், எண்ணிறைந்த ஜனசங்கியைகொண்ட இந்த மாத்வ ஸமூகத்தில், ஏராளமான வருஷ வருமானங்கொண்ட மடாதி பதிகள், ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், மிராசுதார்கள், பட்டதாரிகள், பெரிய உத்யோகஸ்தர்கள், சபைகள், சங்கங்கள் இருக்கையில் ஓர் பத்திரிகையையாவது சரியான அந்தஸ்தில் வைத்து நடத்த முன்வராம

20871


# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில் தயாரித்து விற்பனைக்கு தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறிஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள். |

சந்தனாதித்தைலம்

அரைக்கீரை விதைத்தைலம்

மற்றும் அநேக வாஸனைசாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed at Sri Venkateswar Printing works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.

# மாத்வமித்திரன்.

ஸ்ரீமத்வமதத்தின் உயர்தர நூல்களை சுலபமான தமிழில் சரியானபடி போதிப்பதில் இப்பத்திரிகை இணையற்றது. மடாதிபதிகள் பண்டிதர்கள் பட்டதாரிகள் பணக்காரர்கள் மிட்டாதாரர்கள் முதலியவர்கள் யாவரும் இப்பத்திரிகையை சிலாகிப்பதால்தான் தமிழ்நாடெங்கும் இது சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வ மதத்தை அறியவிரும்புகிறவர்கள் இப்பத்திரிகைக்கே சந்தாதாரராய்ச் சேருங்கள். இதன் வருடசந்தா முன் பணம் ரூ. 3. பழைய பிரதிகள் விலைக்கு கிடைக்கும். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பிறகு எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போஸ்டாபீசின் பெயரை இங்கிலீஷில் சரியான ஸ்பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீ வியாஸவிலாஸம், [illegible]கோணம்.

---

## பாதிவிலை ! பா[illegible]விலை !!

### சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது.

### அபூர்வ நாடகங்கள்.

| | |
|---|---|
| துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கனுதாசாரியார் ஆசிரியர்) | 0—6—0 |
| உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால செட்டியார் பதிப்பாசிரியர் | 0—4—0 |
| சக்குபாய் ஷை. | 0—4—0 |
| ஸ்ரீ ராமானுஜாசாரியார் சரித்திர நாடகம் (மன்னார்குடி டிஸ்டிரிக்ட் முன்சீப் ஸ்ரீமான் S. K. பார்த்தசாரதி அய்யங்கார் ஆசிரியர் | 0—4—0 |
| ஸ்ரீ சங்கராசாரியார் ஷை | 0—2—6 |
| தோண்டரடிப்பொடியாழ்வார் ஷை | 0—2—6 |
| திருஞானசம்பந்தர் ஷை | 0—4—0 |

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீ வியாஸவிலாஸம், கும்பகோணம்.